
Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, JANUARY 26, 2024

வெள்ளிக்கிழமை ஜனவரி 26, 2024 | ஒளி: 10 கதிர் 180 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE





### அதிவேக நெடுஞ்சாலையில் கோரம்

# இராஜாங்க அமைச்சர் நிஷாந்த பலி

## பாதுகாப்பு உத்தியோகத்தரும் மரணம்

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் 11ஆம் மைல்கல் பகுதிக்கு அருகில் வியாழக்கிழமை (25) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உயிரிழந்தார்.

படுகாயமடைந்த அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரும் உயிரிழந்துள்ளனர். இந்நிலையில், விபத்தில் காயமடைந்த வாகன சாரதி ராகம வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருமண வீட்டுக்குச் சென்று கொழும்பை நோக்கி திரும்பிக்கொண்டிருந்த போதே, இவ்வனர்த்தம், வியாழக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ச்சி P2



## "நான் எப்படி தாங்கிக் கொள்வேன்"

கட்டுநாயக்க அதிவேக நெடுஞ்சாலையில் வியாழக்கிழமை(25) அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த உயிரழப்பதற்கு முன்னர் திருமண நிகழ்வொன்றிற்கு சென்று வீடு திரும்பி கொண்டிருந்தார்.

தொடர்ச்சி P2

## "இன்னுமே என்னால் மீளமுடியவில்லை"



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் திடீர் மரணம் பேரதிர்ச்சியளிக்கின்றது. ஒரு துடிப்பான இளம் அரசியல்வாதியாக மக்களுக்கு சேவைகளை முன்னெடுத்த அவரின் மரணம் பேரிழப்பாகும் - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள்

தொடர்ச்சி P2

## வீட்டுக்கு சென்று ஆறுதல் கூறினார் ஜனாதிபதி ரணில்

விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு அரசியல் மட்டத்தில் இரங்கல் தெரிவிக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், சனத் நிஷாந்தவின் கொழும்பில் உள்ள இல்லத்திற்குச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, உறவினர்களுக்கு ஆறுதல் கூறினார்.

இதேவேளை சனத் நிஷங்கவின் சடலம் ராகம வைத்தியசாலையில் வைக்கப்பட்டிருந்த நிலையில், பெருமளவு அரசியல்வாதிகள் வைத்தியசாலையில் கூடியிருந்தனர். அன்னாரது பூதவுடல் பொரளை ஜெயரட்ன மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை (26) புத்தளத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.



## மஹிந்தவுக்கு பாரிய இழப்பு



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் மறைவு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் கட்சிக்கும் புத்தளம் நகர அபிவிருத்திக்கும் பாரிய இழப்பாகும் என அரசாங்கத்தின் பிரதம கொறடாவும் அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார். "சனத் நிஷாந்த புத்தளம் மற்றும் சிலாபம் மாவட்ட மக்களுக்காக உழைத்தவர் என

தொடர்ச்சி P2

## ஜகத் பிரியங்கர நியமனம்?



இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் திடீர் மரணத்தினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு தேசிய சுதந்திர முன்னணி ஜகத் பிரியங்கர நியமிக்கப்படவுள்ளார்.

இதன்படி, விமல் வீரவங்ச தலைமையிலான தேசிய சுதந்திர முன்னணியின் மாவட்டத் தலைவராக பிரியங்கர இருக்கின்றார்.

தொடர்ச்சி P2

## இரவில் கடுங் குளிர்: பகலில் துகள் பனி

சுரேன், செ.தி.பெருமாள்

நுவரெலியாவில் பல்வேறு பகுதிகளில் அதிகாலையில் துகள் பனிப்பொழிவுடன் கூடிய காலநிலை நிலவுகின்றது. அத்துடன், இரவு நேரத்தில் மலையகத்தில் கடும் குளிரான காலநிலையும் பிற்பகல் நேரங்களில் கடும் உஷ்ணமான காலநிலையும் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

நுவரெலியாவில் ஒவ்வொரு வருடமும் டிசெம்பர் மாதத்தில் பனிப்பொழிவு காணப்படும். இந்த வருடத்தின் ஆரம்பத்தில் நுவரெலியா நகரிலுள்ள பூங்கா, தேயிலைத் தோட்டங்களில் பனிப்பொழிந்து காணப்படுகின்றன.

தொடர்ச்சி P2



### கந்தகாட்டில் இருந்து

## 50 கைதிகள் தப்பியோட்டம்



கனகராசா சரவணன்

வெலிகந்தை - கந்தகாட்டு புனர்வாழ்வு நிலையத்தில் மீண்டும் கைதிகளுக்கிடையே ஏற்பட்ட மோதலையடுத்து அங்கிருந்து 50 கைதிகள் புதன்கிழமை (24) இரவு தப்பியோடிவிட்டனர். அவர்களைத் தேடும் நடவடிக்கையை இராணுவத்தினருடன் இணைந்து பொலிஸார் தேடும் நடவடிக்கையினை முன்னெடுத்துவருவதாக வெலிகந்தை பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

### மாவீரர்களுக்கு விளக்கேற்றிய விவகாரம்:

## த.தே.ம. முன்னணி அமைப்பாளர் அவரது மகனுக்கு விளக்கமறியல்

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு - வவுணதீவு பொலிஸ் நிலையத்திற்கு முன்பாக மாவீரர்களுக்கு விளக்கு ஏற்றி நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாகப் பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்ட

தொடர்ச்சி P2

### பாராளுமன்ற கூட்டத்தொடர்

## இன்று ஒத்திவைத்து பெப்.7 ஆரம்பிக்க முடிவு

பாராளுமன்றத்தில் (ஒன்பதாவது பாராளுமன்றத்தின் நான்காவது கூட்டத்தொடர்) வெள்ளிக்கிழமை 26 ஆம் திகதியன்று நிறைவுக்குக் கொண்டுவரத் தீர்மானிக்கப்பட்டுள்ளன. இந்த கூட்டத்தொடர், புதன்கிழமை (24) நள்ளிரவுடன் ஒத்திவைக்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தன எனினும், கூறமுடியாத காரணங்களால் அன்றையதினம் ஒத்திவைக்கப்படவில்லை.

தொடர்ச்சி P2

## "உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும்"

இனிப்புப் பண்டத் தொழில்துறையை முன்னணி ஏற்றுமதித் துறையாக மாற்றுவதற்கு அரசாங்கம் ஆதரவளிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க வலியுறுத்தினார்.

கொக்கோ உள்ளிட்ட பயிர்களைப் பயிரிடுவதற்கு அரசாங்கத்திற்குச் சொந்தமான தோட்டங்களைக் குத்தகை அடிப்படையில் வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

### மீனவர்களின் பிரச்சினைகளை தீர்க்க

## "கூட்டு நடவடிக்கை குழுவை அமைக்கவும்"



மீனவர்கள் தொடர்பான பிரச்சினைகளுக்கு தீர்வு காண இந்தியா - இலங்கை இடையேயான கூட்டு நடவடிக்கை குழுவை அமைக்க வேண்டும் என தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார். இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# இராஜாங்க அமைச்சர் நிஷாந்த பலி

கட்டுநாயக்கவிலிருந்து கொழும்பு நோக்கிப் பயணித்த சனத் நிஷாந்தவின் ஜீப், அதே திசையில் பயணித்துக் கொண்டிருந்த கொள்கலன் வாகனத்துடன் மோதி, பின்னர் வீதி பாதுகாப்பு வேலியிலும் மோதி விபத்துக்கு உள்ளாகியுள்ளது.

விபத்தில் பலத்த காயங்களுக்குள்ளான இராஜாங்க அமைச்சர், அவரது பாதுகாப்பு உத்தியோகத்தர் மற்றும் வாகன சாரதி ஆகியோர் ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதைத் தொடர்ந்து இராஜாங்க அமைச்சரும் அவரது பாதுகாப்பு உத்தியோகத்தரும் உயிரிழந்துள்ளனர். சம்பவத்தை அடுத்து பாரவூர்தியின் சாரதி பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்

விபத்தில் உயிரிழந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் 28ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஆராச்சிக்கட்டுவவில் மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அரச தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் ஸ்ரீலங்கா பொது முன்னணியின் முக்கியஸ்தர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

## “நான் எப்படி தாங்கிக் கொள்வேன்”

சமூக ஊடக செயற்பாட்டாளர் ஒருவரின் திருமணத்திற்குச் சென்று மீண்டும் திரும்பும்போதே, இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. திருமணமான மணமகன் இது தொடர்பில் பேஸ்புக்கில் பதிவிட்டு தங்கள் கவலையை வெளிப்படுத்தியுள்ளார். “மாமா சனத் நிஷாந்தவுக்கு என்ன நடந்தது என்று கற்பனை செய்து கூட பார்க்க முடியவில்லை. எனக்காக என்னைப் பார்க்க வந்த பயணத்தில் இந்த சம்பவம் நடந்தது என்பதனை நான் எப்படித் தாங்கிக் கொள்வேன். ஆத்மா சாந்தி அடையட்டும் மாமா” என அவர் பதிவிட்டுள்ளார்.

## மஹிந்தவுக்கு பாரிய இழப்பு

அவர் ஊடகங்களுக்கு தெரிவித்தார். புத்தளம் மற்றும் சிலாபத்தில் இரண்டு நிகழ்வுகளில் கலந்து கொண்டு கொழும்பு செல்லும் வழியில் அவர் இந்த விபத்தைச் சந்தித்துள்ளார். மே 9ஆம் திகதி அரகலய போராட்டத்தின்போது, புத்தளத்தில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லம் எரிக்கப்பட்டது. எனவே, புத்தளத்தில் ஓய்வெடுக்க வீடு இல்லாத நிலையில், கொழும்புக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோதே, இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மேலும், புதன்கிழமை (25) இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வுகளின் பின்னர் அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் சனத் நிஷாந்த கலந்துகொண்டார்” அவர் தெரிவித்தார்.

பொலிஸ் விசாரணைகளின் படி, இராஜாங்க அமைச்சரின் சாரதி மதுபோதையில் இருக்கவில்லை என அமைச்சர் ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, சனத் நிஷாந்த கட்சிக்கும் மாவட்டத்திற்கும் பெரும் பலமாகத் திகழ்ந்ததாகப் பாராளுமன்ற உறுப்பினர் சமல் ராஜபக்ஷ மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சஞ்சீவ எதிரிமான்ன ஆகியோர் ஊடகங்களுக்குத் தெரிவித்தனர். இராஜாங்க அமைச்சரின் இழப்பை யாராலும் ஈடுசெய்ய முடியாது என அவர்கள் தெரிவித்தனர்.

மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, பாராளுமன்ற உறுப்பினர் நாமலின் திருமண வைபவத்திற்கான நிலுவையிலிருந்த மின்கட்டணம் 2.6 மில்லியன் ரூபாயை செலுத்திய சம்பவம் அண்மையில் சர்ச்சையை ஏற்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

## “இன்னுமே என்னால் மீளமுடியவில்லை”

அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது,

“அதிகாலை இடம்பெற்ற விபத்தில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவும், அவரின் மெய்பாதுகாவலரும் உயிரிழந்துவிட்டனர் என்ற செய்தியைக் கேள்வியுற்றதும் அடைந்த அதிர்ச்சியிலிருந்து என்னால் இன்னும் மீளமுடியவில்லை. எனது அமைச்சில் இராஜாங்க அமைச்சராகப் புரிந்துணர்வுடனும், நட்புறவுடனும் செயற்பட்டவர் அவர், மக்களுக்குச் சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்ற உறுதியான கொள்கையுடன் செயற்பட்டவர்.

புத்தளம் மாவட்ட மக்களுக்காக மட்டுமின்றி முழு நாட்டுக்கும் சேவையாற்றியவர். மலையக மக்கள் தொடர்பிலும் புரிந்துணர்வுடன் செயற்பட்ட எனது சிறந்த நண்பர் என்றும் தெரிவித்துள்ளார்.

அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரின் மனைவி, பிள்ளைகள் மற்றும் குடும்பத்தாருக்கு எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அத்துடன், உயிரிழந்த பொலிஸ் அதிகாரியின் குடும்பத்தாருக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்” என்றும் குறிப்பிட்டுள்ளார்.



## ஜகத் பிரியங்கர நியமனம்?



விமல் வீரவன்சவும் தனது கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மற்ற பாராளுமன்ற உறுப்பினர்களுடன் எதிர்க்கட்சியில் அமர்ந்திருக்கின்றனர்.

மறைந்த இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த ஆளும் தரப்பில் அமர்ந்துள்ளார். இந்நிலையில், வெற்றிடம் நிரப்பப்படும் போது அரசாங்கம் ஆசனம் ஒன்றை இழக்கும். அத்துடன், பாராளுமன்ற ஆசனங்களில் மாற்றங்கள் ஏற்படும்.




## இரவில் கடுங் குளிர்: பகலில் துகள் பனி

மேலும், அதிகாலையில் அதிகம் குளிரான நிலையை மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். இதேவேளை, பனிப்பொழிவால் தேயிலை, மரக்கறி மற்றும் மலர் உற்பத்திகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது . தற்போது பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ள நிலையில் அண்மைக்காலமாக நுவரெலியாவிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இந்நிலையில், நுவரெலியாவில் நிலவும் மாறுபட்ட காலநிலை மாற்றம் அவர்களை மிகவும் கவர்ந்துள்ளதாகவும் கூறப்படுகிறது. அதிகாலை வேளையில் கடுமையான பனி மூட்டம் காணப்படுவதால், வாகன சாரதிகளை மிகவும் அவதானமாக வாகனங்களைச் செலுத்துமாறு ஹட்டன் வலய போக்குவரத்து பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர்.

சிவனொளிபாத மலைக்குத் தரிசனம் செய்யச் செல்லும் யாத்திரர்கள், குளிரான வேலையில் மலைக்குச் செல்லுவதைத் தவிர்க்க வேண்டுமெனச் சுகாதார அதிகாரிகள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

மத்திய மலைநாட்டில் தொடர் வெப்பமான வானிலை காரணமாக நீர் நிலைகள் வற்றிப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

## 50 கைதிகள் தப்பியோட்டம்

குறித்த புனர்வாழ்வு நிலையத்தில் சம்பவ தினமான புதன்கிழமை (24) பகல் இரு கைதிகளுக்குள் ஏற்பட்ட சண்டையில் இருவரும் காயமடைந்து வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்பட்டு மீண்டும் புனர்வாழ்வு நிலையத்திற்குக் கொண்டுவரப்பட்டனர்.

இந்த நிலையில், புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவரும் கைதிகளுக்கிடையே மாத்தறை, காலி, ஹம்பாந்தோட்டை போன்ற பிரதேச வாதத்தின் அடிப்படையில் அன்றிரவு கலகம் ஏற்பட்டுள்ளது. அங்கிருந்து பாதுகாப்பு வேலியை உடைத்துக்கொண்டு 50 பேர்வரை தப்பியோடியுள்ளனர்.

இவ்வாறு தப்பியோடியவர்கள் அந்த பகுதி காட்டில் தலைமறைவாகி இருப்பதாக தகவல் கிடைத்ததை அடுத்து, அந்தப் பகுதியை இராணுவத்துடன் இணைந்து பொலிஸார் சுற்றிவளைத்துத் தேடும் நடவடிக்கை முன்னெடுத்தனர். அதன்போது 17 கைதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் அறியமுடிகின்றது.

இதேவேளை மதுபோதைக்கு அடிமையாகியுள்ள சுமார் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கப்பட்டுவருகின்றனர். அவர்களுக்குள்ளே பிரதேச வாத சண்டை,வழங்கப்படும் உணவு உட்பட பல காரணங்களை முன்வைத்து சண்டை ஏற்பட்டு அங்கிருந்து பாதுகாப்பு வேலியை உடைத்துத் தப்பியோடும் நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## த.தே.ம. முன்னணி அமைப்பாளர் அவரது மகனுக்கு விளக்கமறியல்

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மாவட்ட அமைப்பாளர், அவரது மகன் உட்பட்ட இருவரையும் எதிர்வரும் பெப்ரவரி 7ஆம் திகதிவரை விளக்கமறியல் வைக்குமாறு மட்டு. நீதவான் நீதிமன்ற நீதவான் புதன்கிழமை (24) உத்தரவிட்டார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி கட்சியின் மாவட்ட அமைப்பாளர் குககுலராஜா (குகன்) அவரது மகன் ஆகியோர் வவுணதீவு பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக மாவீரர்களுக்குக் கடந்த வருடம் நவம்பர் 27ஆம் திகதி விளக்கேற்றி அஞ்சலி செலுத்திய குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர். கைது செய்யப்பட்ட இருவரிடமும் பயங்கரவாத தடுப்பு பிரிவினர், நீதிமன்ற அனுமதியுடன், விசாரணைகளை முன்னெடுத்தனர். அந்த வழக்கு விசாரணைக்காக நீதவான் நீதிமன்றில் எடுக்கப்பட்டது. இதன்போது அவர்கள் இருவரையும் எதிர்வரும் 7ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

## “கூட்டு நடவடிக்கை குழுவை அமைக்கவும்”

ஜெய்சங்கருக்கு எழுதியுள்ள கடிதத்திலேயே தமிழக முதல்வர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தமிழக மீனவர்கள் தொடர்ந்தும் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்படுவது கவலையளிப்பதாக அவர் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை கடற்படையினரால் கடந்த 22 ஆம் திகதி கைது செய்யப்பட்ட தமிழகத்தைச் சேர்ந்த 6 மீனவர்களையும் அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உரிய தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ள வலியுறுத்தி வெளிவிவகார அமைச்சருக்குத் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் புதன்கிழமை (24) கடிதம் எழுதியுள்ளார்.

இத்தகைய போக்கு பதற்றமான சூழ்நிலையை உருவாக்கும் என்பதால், இதில் மத்திய அரசு உடனடி கவனம் செலுத்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அப்பாவி மீனவர்கள் தொடர்ந்தும் இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தவிர்க்கவும் இந்திய மீனவர்களுக்கும் இலங்கை கடற்படையினருக்கும் இடையே நீண்டகாலமாக நிலுவையிலுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஏதுவாகவும் உரிய தூதரக வழிமுறைகளை மேற்கொண்டு கூட்டு நடவடிக்கை குழுவைக் கூட்டுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தமிழக முதல்வர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கை காவலில் உள்ள தமிழக மீனவர்களையும் அவர்களது படகுகளையும் விரைந்து விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என முதல்வர் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

## “உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும்”

கொழும்பு சினமன் கிரேண்ட் ஹோட்டலில் புதன்கிழமை (24) பிற்பகல் நடைபெற்ற இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர் சங்கத்தின் 30ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

சிலாபம் மற்றும் குருநாகல் பிரதேசங்களில் உள்ள தோட்டங்களுக்குச் சொந்தமான அனைத்துக் காணிகளையும், ஜனதா தோட்ட அபிவிருத்திச் சபை , அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான எல்கடுவ உள்ளிட்ட ஏனைய காணிகளையும் இதற்காகப் பயன்படுத்துவது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதுவரை பயன்படுத்தப்படாத மகாவலி ஏ மற்றும் பி வலயங்களில் பயிர்ச்செய்கையியை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டில் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்த முடியும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

மேலும், நாட்டில் போட்டிமிக்க ஏற்றுமதிப் பொருளாதாரத்தை உருவாக்குவதற்காக தேசிய உற்பத்தித் திறன் ஆணைக்குழு ஸ்தாபிக்கப்படும் எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஏனைய நாடுகளுடன் தற்போதுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளையும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளையும் வலுப்படுத்த அரசாங்கம் எதிர்பார்த்திருப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன், தேயிலை ஆராய்ச்சி நிறுவனம், தென்னை ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றையும் நவீனமயப்படுத்தப்பட்டு வருவதாகவும் இந்த ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் ஆராய்ச்சித் துறைக்காக சுமார் 08 பில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இனிப்புப் பண்டத் தொழில்துறையினூடாக தேசிய பொருளாதாரத்திற்கு அவர்கள் ஆற்றிய பங்களிப்பைப் பாராட்டி, நாட்டில் உள்ள எட்டு முன்னணி இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்களுக்கு ஜனாதிபதியினால் விருதுகள் வழங்கி வழங்கப்பட்டன.

மெலிபன் ஸ்தாபகர் ஏ.ஜி.ஹின்னி அப்புஹாமி, கெண்டோஸ் ஸ்தாபகர் உபாலி விஜேவர்தன, Elephant House ஸ்தாபகர் ஆர்தர் வொன் போஸ்னர், மஞ்சி ஸ்தாபகர் மேனக விக்ரமசிங்க, மோதா ஸ்தாபகர் ஜூலியஸ் மோதா, உஸ்வத்த ஸ்தாபகர் பி.ஜே. சி. பெரேரா, லக்கி லேண்ட் ஸ்தாபகர் சிங்கசாமி முத்தையா, செரிஸ் பிஸ்கட் ஸ்தாபகர் விதானகே ஜோன் அப்புஹாமி ஆகியோருக்கு இந்த விருதுகள் வழங்கப்பட்டன.

இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் கலாநிதி சமித பெரேரா, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கு நினைவுப் பரிசை வழங்கி வைத்தார்.

கைத்தொழில் மற்றும் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பதிரன, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, பொருளாதார விவகாரங்களுக்கான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் கலாநிதி ஆர்.எச். எஸ். சமரதுங்க மற்றும் இலங்கை இனிப்புப் பண்ட உற்பத்தியாளர்கள் சங்க உறுப்பினர்கள் உள்ளிட்ட பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## இன்று ஒத்திவைத்து பெப். 7 ஆரம்பிக்க முடிவு

கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் பாராளுமன்றத்தின் புதியக் கூட்டத்தொடரை ஜனாதிபதி பெப்ரவரி 7ஆம் திகதியன்று உத்தியோகப்பூர்வமாக ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

இந்தக் கூட்டத்தொடரின் மற்றுமொரு கூட்டம், ஜனவரி 23 மற்றும் 24ஆம் திகதிகள் நடைபெற்றன.

அந்த இரண்டு நாட்கள் மட்டுமே பாராளுமன்றம் கூடும், 25ஆம் திகதி பூரணை தினம் என்பதால் கூடவில்லை. பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்படுவதால், அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோப்) அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு (கோபா) ஆகிய குழுக்கள் உள்ளிட்ட 50 குழுக்களுக்கு மேல் இரத்தாகும் அந்த குழுக்கள் அனைத்தும் மீளவும் நிறுவப்படவேண்டும்.

பாராளுமன்ற கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டதன் பின்னர் உயர் உத்தியோகபூர்வ நிலைகள், சிறப்புக் குழுக்கள் மற்றும் துறைசார் மேற்பார்வைக் குழுக்கள் மீதான பாராளுமன்றக் குழு மட்டுமே இரத்தாகாது.

கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி பாராளுமன்றம் கடைசியாக ஒத்திவைக்கப்பட்டது.

இதனால் ஒன்பதாவது பாராளுமன்றத்தின் மூன்றாவது கூட்டத்தொடர் முடிவடைந்தது.

சிறு விளம்பரம்

மத்துகம, லீஹினியாவ தேயிலைத் தோட்டத்துக்கு கொழுந்து பறிப்பதற்கு மற்றும் சிறு வேலைகளைச் செய்வதற்கு தொழிலாளர் குடும்பங்கள் சில தேவை. கூடிய சம்பளம், தண்ணீர், மின்சாரத்துடன் வீட்டு வசதி, 0775020316, 0714518409

# “வீண் செலவு செய்யும் அளவுக்கு இ.தொ.கா வளர்ந்து விட்டது”

மலையக அரசியலிலே, மக்கள் பணத்தில் கொண்டாட்டம் நடத்துவதும், வீண் விரயம் செய்வதும் புதியதொன்றல்ல. ஆனால், அவை நாள்தோறும் திரை மறைவில் நடந்துகொண்டிருந்தது. இன்று மக்கள் பணத்தை, பகிரங்கமாக, மேடை போட்டு வீண் செலவு செய்யும் அளவுக்கு இ.தொ.க வளர்ந்து விட்டது என்று கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வேலு குமார் தெரிவித்துள்ளாா.

மேலும், மலையக மக்களின் 200ஆவது ஆண்டை குறிக்கும் முகமாக, அடையாளப்படுத்தக்கூடிய, எந்தவொரு செயற்பாடும் செய்யப்படவில்லை. அவர்களது வாழ்வியலில் மாற்றத்தைக் கொண்டுவருவதற்கான ஓர் ஆரம்பமாக, ஓர் அடிக்கல்லைக் கூட நட்டு வைப்பதற்கு இன்றைய அரசாங்கத்துக்கும், அமைச்சர்களுக்கு முடியாமல் போனது. ஆனால், மக்கள் பணத்தில், அம்மக்களை அடைமானம் வைத்து, அனுசரணை என்ற பெயரில் பணத்தைச் சேகரித்து, நாம் 200 என்ற யாருக்கும் பயனற்ற கட்சி கூட்டம் ஒன்றை நடத்தி முடித்தார்கள்.

இப்பொழுது, மீண்டும் மக்கள் பணத்தில், தேசிய பொங்கல் விழா என மலையக மக்களை, தமிழை, மலையக மக்களின் கலாசாரத்தை கொச்சைப் படுத்தும் நிகழ்வொன்றை நடத்தியுள்ளனர். அதற்குச் சிறு அளவு அரச நிதியே ஒதுக்கீடு செய்யப்பட்டதென நியாயம் கூறுகின்றனர்.

சிறு அளவானாலும், அது மக்கள் பணம் என்பதை ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும்.

அத்துடன், ஏனையவை அனுசரணையில் கிடைத்ததாம். அந்த அனுசரணைகள் மலையக மக்களுக்கு வழங்கப்பட்டது. அவர்களது பொருளாதார நிலையை, எதிர்கால தேவைகளை முன்கூட்டி பெறப்பட்டவை. மொத்தத்தில் அனைத்துமே மக்கள் பணம். இந்த தேசத்தின் பணம். அதனை அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் என்பதால், ஒரு நபரின் தேவைக்கோ, ஒரு கட்சியின் தேவைக்கோ எவ்வாறு பயன்படுத்த முடியும்? அது மட்டுமல்லாது, அம்மக்களின் சுய கௌரவத்திற்குத் தலைகுனிவு வரும் வகையில் எவ்வாறு நிகழ்வு நடத்த முடியும் என்றும் வேலுகுமார் எம்.பி கேள்வியெழுப்பியுள்ளார்.

மேலும், செய்வதையெல்லாம் செய்துவிட்டு, அதற்கு கூறும் நியாயங்கள் சிறு பிள்ளை தனமாக இருக்கின்றன. காலாகாலமாக மக்கள் பணத்தில், திரை மறைவில் கொண்டாட்டம் நடத்தி குதூகலமாக வாழ்ந்து வந்தவர்கள், இன்று பகிரங்கமாக அதனைச் செய்ய ஆரம்பித்திருக்கின்றனர்.

இதற்கான பதில் மிக விரைவிலேயே கிடைக்கும் என்பது சமூக வலைத்தள பதிவுகளிலிருந்து முன்கூட்டியே தெரிகின்றது என்றும் கூறியுள்ளார்.





## மோட்டார் குண்டுகள் மீட்பு

வ.சக்தி

மட்டக்ககளப்பு - களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பட்டிருப்பு பாலத்தின் கீழிருந்து இரண்டு சக்தி வாய்ந்த மோட்டார் குண்டுகளை மீண்டுள்ளதாக களுவாஞ்சிகுடி பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு வாவியின் பட்டிருப்பு பகுதியில் மீன்பிடித்தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர் ஒருவரின் வலையில் இந்த இரு குண்டுகளும் புதன்கிழமை (24) அகப்பட்டுள்ளன. அதனை அவதானித்த குறித்த மீனவர் களுவாஞ்சிகுடி பொலிஸாருக்கு அறிவித்துள்ளார்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் இரண்டு குண்டுகளையும் மீண்டுள்ளனர். நீதிமன்ற உத்தரவைப் பெற்று குண்டு செயலிழக்கும் பிரிவினரைக் கொண்டு இக்குண்டுகள் செயலிழக்கச் செய்ய உள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த யுத்த காலத்தில் பட்டிருப்பு பாலத்தில் இருமருங்கிலும் இலங்கை இராணுவத்தினரின் பாதுகாப்பு காவலரண்கள் இருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.



## விரிவுரையாளர் ஷிப்லிக்கு Best Researcher விருது

பாறுக் ஷிஹான்

இந்தியாவின் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகமும், இலங்கையின் கிழக்குப் பல்கலைக்கழகமும் இணைந்து கிழக்குப் பல்கலைக்கழகத்தில் அண்மையில் ஒழுங்கு செய்திருந்த *India - Sri Lanka Pride of Education* நிகழ்வில் *Best Researcher* இற்கான விருதினை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எஃப். எச். ஏ. ஷிப்லி பெற்றுக்கொண்டுள்ளார்.

இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழக பல்துறை ஆராய்ச்சிக்கான நிலையம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழகம் அத்துடன் இந்தியாவின் ஈ.எஸ்.என் பதிப்பகம் என்பன இணைந்து ஏற்பாடு செய்த “நாளைய சவால்களுக்கான நிலைத்திருக்கும் தன்மை, புத்தாக்கம், இடைநிலை ஆராய்ச்சி” என்ற தலைப்பிலான சர்வதேச மாநாடு கிழக்குப் பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது, தமிழ்நாடு ஆசிரியர் கல்வியியல் பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி பி.நாக சுப்ரமணியன் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் ஆகியோர்களிடமிருந்து இவ்விருதினை இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் எஃப்.எச்.ஏ.ஷிப்லி பெற்றுக்கொண்டுள்ளார்.

## சனியன்று திறப்பு விழா

எஸ். தில்லைநாதன்

‘பெட்டகம்’ எனும் தமிழியல் ஆவண சேகரிப்பு மையத்திறப்பு விழா, மல்லாகம் வீதி குப்பிளான் சந்தியில் எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

ஓய்வுபெற்ற சிரேஷ்ட நிர்வாக அதிகாரி செல்வின் இரேனியஸ் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ்.ரகுராம் கலந்துகொள்வார்.

நிகழ்வில், ஆசியுரையை வேலன் சுவாமிகளும் அறிமுக உரையை சமூக விஞ்ஞான ஆய்வு மைய இயக்குநர் சி.அ.யோதிலிங்கமும் நிகழ்த்துவார்கள்.

கருத்துரைகள் யாழ். பல்கலைக்கழக அரசறிவியல்துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர், இ.இராஜேஸ்கண்ணா, அரசியல் ஆய்வாளர் நிலாந்தன், இந்து கற்கைகள் பீட சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி. செல்வ மனோகரன், ஓய்வு நிலை கிராம சேவையாளர் சோ.பரமநாதன் ஆகியோர் வழங்குவார்கள்.

## “மணல் அகழ்வை தடுப்பதற்கு ஒத்துழைப்பு அவசியமானது”



கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும் சட்ட விரோத மணல் அகழ்வு தொடர்பிலான விசேட கலந்துரையாடல் ஒன்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் புதன்கிழமை(24) காலை 11.30 மணிக்கு நடைபெற்றது.

இங்கு கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் :

கிளிநொச்சி மாவட்டத்தில் சட்ட விரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாகக் கடந்த கூட்டங்களில் பொலிஸ், இராணுவம், கடற்படை பிரிவுகளுக்கு மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரால் வலியுறுத்தப்பட்டு கட்டுப்பாட்டுக்குள் இருந்தது. ஆனால் தற்போது குறித்த நடவடிக்கைகளில் தளர்வு நிலை காணப்படுகிறது.

இதற்காகவே குறுகிய காலத்தில் இக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதற்கு அனைவரது ஒத்துழைப்பும் அவசியமானது என தெரிவித்தார்.

இதன்போது, சட்ட விரோத மணல் அகழ்வைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பாக சம்மந்தப்பட்ட துறைசார்ந்த அதிகாரிகளுடன் கலந்துரையாடப்பட்டது.

மேலும், கிளிநொச்சி குளத்தின் சுற்றுச் சூழல் பாதுகாப்பு தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது. குறிப்பாகப் பிரதேச சபையினால் மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

இக்கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர், மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் (காணி), திட்டமிடல் பணிப்பாளர், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவரின் இணைப்பாளர், கண்டவளைப் பிரதேச செயலாளர், உதவி மாவட்டச் செயலாளர், பச்சிலைப்பள்ளி உதவி பிரதேச செயலாளர், கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர், துறைசார் திணைக்கள தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள், பொலிஸ் மற்றும் இராணுவ அதிகாரிகள், இரணைமடு கமக்காரார் அமைப்பின் செயலாளர், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

## “எமது முத்துக்கள்” விபரத் திரட்டு

ஏ.எம்.ஜலீல்

உக்குவளை மற்றும் மாத்தளை பிரதேசத்திலுள்ள பல்துறை கலைஞர்கள் அத்துடன் இலைமறை காய்களாக உள்ள கலைஞர்களுடன் கலந்துரையாடல், மாத்தளை காரியாலயத்தில் நடத்தவுள்ளதாக முஸ்லிம் கலாசார திணைக்கள மாத்தளை மாவட்ட அபிவிருத்தி அதிகாரி ஏ.எல்.எம்.ரஹ்மதுல்லாஹ் தெரிவித்துள்ளார்

இக்கலைஞர்களின் கலைத்துறை செயற்பாடுகள், எதிர்நோக்கும் சங்கடங்கள், தேவைகள் எதிர்ப்பார்புகள் என்பன பற்றி அவர்களுடன் கலந்துரையாடி, அவ்வாறானவர்களுக்குத் தேவையான வசதி வாய்ப்புக்களை திணைக்களம் ஊடாகச் செய்துகொடுத்து அவர்கள் மூலமாக கலைத்துறையை மேம்படுத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

“எமது முத்துக்கள்” எனும் தலைப்பில் கலைஞர்களின் விபரத் திரட்டு ஒன்றையும் வெளியிடவுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எனவே, கலைஞர்கள் தமது கலைத்துறை விபரங்களை தமது தொலைபேசி இலக்கம் மற்றும் புகைப்படத்துடன் ஏ.எல்.எம்.ரஹ்மதுல்லாஹ், அபிவிருத்தி அதிகாரி, கலைப் பிரிவு, பிரதேச செயலகம். மாத்தளை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும் மேலதிக விவரங்களுக்கு 0776105561 என்ற வட்ஸ்அப் இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்ளுமாறும் கேட்டுக்கொண்டுள்ளார்.

## நெற் செய்கையில் வீழ்ச்சி விவசாயிகள் கடும் கவலை

ஏ.எச். ஹஸ்பர்

தற்போது பெரும்போக நெற் செய்கைக்கான இயந்திரம் மூலமான அறுவடை இடம்பெற்றுவரும் நிலையில், தம்பலகாமம் கமநல சேவை பிரிவுக்குட்பட்ட பகுதியில் உள்ள குரமொட்டி வெளி விவசாய நிலத்தில் அறுவடையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இப்பகுதியில் உள்ள குரமுட்டி வெளி, கந்தளாய் தீவு, ஆணை இறக்கம் போன்ற விவசாய பகுதியில் சுமார் 600 ஏக்கர் வரை செய்கை பண்ணப்பட்டு அறுவடை இடம்பெற்று வருகிறது. அசாதாரண கால நிலையின் தாக்கம், நோய் தாக்கம் போன்ற காரணங்களால் நெற் செய்கை வீழ்ச்சி கண்டுள்ளதாக குறிப்பிட்டுள்ளனர்.

**“ எதிர்கால சிறுபோக நெற் செய்கைக்கு தரமான பசளை, கிருமி நாசினிகளை தருமாறும் கோரிக்கை**

ஒரு ஏக்கருக்கு ஐந்து மூடை அளவிலும் விளைச்சல் கிடைக்கிறது வெட்டுக் கூலி ஏக்கருக்கு 16,000 ரூபாய் வரை செல்கிறது எல்லாச் செலவுகளும் போக மிஞ்சியிருப்பது ஒன்றுமே இல்லை எனவும் மனைவி பிள்ளைகளின் தங்க நகைகளை அடகு வைத்து செய்யப்பட்ட வேளாண்மை செய்கை இம் முறை நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளதாக விவசாயிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.

எனவே, தங்களுக்கு தேவையான நஷ்ட ஈடுகளை பெற்றுத்தருமாறும் எதிர்கால சிறுபோக நெற் செய்கைக்கு தரமான பசளை, கிருமி நாசினிகளை தருமாறும் கோரிக்கை விடுக்கின்றோம் என கூறியுள்ளனர்.

## அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கு மாநாடு

“மீன்பிடி தொழில் அனர்த்தத்தில் தீர்விற்கான மீனவர் பலத்தைக் கட்டியெழுப்புவோம் ”எனும் தொனிப்பொருளின் கீழ் அம்பாறை மாவட்ட மீனவர்களுக்கான மாநாடு சாய்ந்தமருதில் புதன்கிழமை (24) இடம்பெற்றது.

தேசிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த இந்த மாநாட்டில் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் தேசிய தொழிற்



சங்க சம்மேளனத்தின் தலைவருமான கே.டி.லால் காந்த மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தலைவருமான நிஹால் கலபதி மற்றும் தேசிய மக்கள் சக்தியின் தேசிய நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் அகில இலங்கை பொது மீனவர் சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளருமான ரத்ன கமகே உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## அதீத போதையால் மற்றொருவர் மாண்டார்

எம். றொசாந்த்

யாழ்ப்பாணம் நகரை அண்டிய கலட்டி பகுதியில், போதைப்பொருளை அதீத அளவு நுகர்ந்த இளைஞன் ஒருவர் புதன்கிழமை (24) உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் பிரேதப் பரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்ட நிலையில், உடற்கூற்றுப் பரிசோதனையில் இளைஞன் போதைப்பொருளை அதீத அளவு நுகர்ந்தமை கண்டறியப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர், சாவகச்சேரி பகுதியில் இளைஞன் ஒருவர் போதைப்பொருள் பாவனையால் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையாக பொலிஸாரின் விசேட நடவடிக்கைக்கான “யுக்திய” நடவடிக்கை யாழ்ப்பாணத்திலும் தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையிலையே போதைப்பொருள் பாவனையால் குறித்த இரு மரணங்களும் நிகழ்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அப்பாவிகளின் உயிர்களை பறிக்கும் சிவில் உடைகள்

நாட்டில் ஒரு பக்கத்தில் 'யுக்திய' நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் அதேநேரத்தில், துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களுக்கும் குறைவில்லை. பாதாள உலகக் கோஷ்டியினர், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு இடையிலான பழைய பகைமையைத் தீர்த்துக்கொள்ளும் வகையிலே துப்பாக்கிப் பிரயோகங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அத்துடன், விகாரைகளுக்குள் சென்றும் தேரர்கள் பலியெடுக்கப்படுகின்றனர். அந்தளவுக்குத் துப்பாக்கி கலாசாரம் மோசமாகிவிட்டது.

இந்நிலையில், 'யுக்திய' நடவடிக்கையின் காரணமாக நாட்டில் குற்றச்செயல்கள் 17 சத வீதத்தால் குறைந்துள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் திரான் அலஸ் அண்மையில் தெரிவித்திருந்தார்.

அப்படியாயின், சிக்கிக்கொள்வதற்கு முன்னர் அல்லது எதிர்த்தரப்பினரால் காட்டிக்கொடுப்பதற்கு முன்னர், தீர்த்து கட்டிவிட வேண்டுமென நினைக்கும் தரப்பினரால் துப்பாக்கிப் பிரயோகங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர்களை கைது செய்துள்ள பொலிஸார், குற்றச் சம்பவங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட வாகனங்களையும் கைப்பற்றியுள்ளமை வரவேற்கத்தக்கது. எனினும், பொலிஸில் கடமையாற்றும் ஒரு சிலரின் செயலால், முழு பொலிஸ் திணைக்களத்துக்கும் இழுக்கு ஏற்பட்டுவிடுகின்றது.

அப்பாவி மக்களைக் குறிவைக்கும் பொலிஸாரின் இவ்வாறான சம்பவங்களுக்கு வடக்கு, கிழக்கில் குறைவே இருந்ததில்லை. எனினும், தற்போது தெற்குக்கும் வியாபித்துள்ளது. இதனால், பலரது குடும்பங்கள் அநாதையாக்கப்பட்டுள்ளன. அவ்வாறான குடும்பங்களின் மனைவி மற்றும் பிள்ளைகளின் எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ளது.

மஹரச்சிமுல்ல, வட்டகந்த பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதான கே.ஏ.ரொஷாந்த குமாரசிங்க கடந்த 18ஆம் திகதி இரவு உயிரிழந்துள்ளார். இது நோய் அல்லது விபத்து காரணமாக இல்லை. மூன்று பிள்ளைகளின் தந்தையான இவர் மீது பாதாள உலகக் கும்பலால் அல்ல, சட்டம் ஒழுங்கைப் பாதுகாக்கும் பொலிஸ் அதிகாரியே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார்.

பொலிஸாரின் சமிக்ஞையை மீறி லொறியின் சாரதி லொறியை ஓட்டிச் சென்றதாகவும் அந்த லொறியை மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள் லொறியை நிறுத்திய பின்னர், சாரதியைப் பயமுறுத்துவதற்காகக் கைத்துப்பாக்கியை எடுத்தபோது, அது தவறுதலாக வெடித்துவிட்டது. அதனால், சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்ததாகவும் பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

அந்த சம்பவம் இடம்பெற்ற போது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சிவில் உடையில் இருந்ததாக கூறப்படுகிறது. சிவில் உடையில் வாகனங்களைச் சோதனை செய்யும் அதிகாரம் பொலிஸ் அதிகாரிகளுக்கு இல்லை. அதேபோல, சிவில் உடை அணிந்தவர்கள், வாகனங்களை நிறுத்தச் சொன்னவுடன் நிறுத்தினால், அது அவரின் சமூக அறிவை பூஜ்ஜியமாகவே காட்டுகின்றது.

துப்பாக்கியைச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாவிட்டால், சிக்கல் உள்ளது. துப்பாக்கியைச் சரியாகப் பயன்படுத்தத் தெரியாத ஒருவருக்குத் துப்பாக்கியை வழங்குவதும் கடுமையான குற்றமாகும். அந்தத் தவறினால் ஒரு மனிதன் தன் உயிரைக் கொடுக்க வேண்டியதாயிற்று. இந்த இழப்புகளுக்கு இழப்பீடு வழங்க முடியாது.




தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk







## வாழ்வியல் தரிசனம்

உலகை நோக்கும் ஒரு மனிதனை, உலகமும் ஏறெடுத்துப் பார்க்கின்றது. இதை நீங்கள் உறுதியுடன் தீட்சண்யமாக உணருங்கள். வையகமும் மனிதனும் ஒன்றோடு ஒன்றாகப் பிணைந்தவர்கள்.

எனவே நீங்கள் என்றும் உலகை விரும்புங்கள்; அதனுடன் பயணிப்பீர்களாக! உலக ஈர்ப்பு உங்களை நாடிவிடுகின்றன. மனம் மகா வல்லமையும் வசீகரமும் கொண்டது. உலகம் மட்டுமல்ல, பிரபஞ்சமும் எமக்கானது. நாங்கள் உலகை வெறுக்க வேண்டிய அவசியம் கிடையாது. எவரையும் குறைசொல்வதும் துன்பம் வந்தால், பூமியில் ஏன்பிறந்தேன் எனச் சலிப்படைவதும் சிறப்பான வாழ்வு அமைந்தால், தன்னையும் பிறந்த மண்ணையும் மறப்பதும் தவறானது.

இன்று பல உலகத் தலைவர்கள், தங்களின் தேசம் மகத்தானது; எல்லாமே தங்களுக்கானது எனக் கருதி மமதை கொள்கின்றார்கள். இவர்கள் கடவுளுக்கு மட்டுமல்ல, மனிதனுக்கும் பயப்படுவதில்லை.

போரை விரும்புகின்றார்கள், வலிந்து சண்டைக்குப் போகின்றார்கள். வெளிநாடுகளுடன் போரிட விரும்பாதவர்கள், தங்கள் நாட்டுக்குள் வீரம்பேசி, மக்களை முடக்குகின்றார்கள். கடவுளை நம்புங்கள்; பிறந்த அகிலத்தைப் போற்றுங்கள்.

நன்றி– பருத்தியூர் பாலா. வயிரவநாதன்

## கடிதங்கள்

### வீதியை புனரமைக்கவும்



நாட்டில் அண்மையில் பெய்த மழை மற்றும் வெள்ள அனர்த்தம் காரணமாக ஒலுவில் - அஷ்ரப் நகரில் பாலத்துடன் முற்றாக சேதமடைந்துள்ள பிரதான வீதியைப் புனரமைத்து தருமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த பாலத்தின் உடைந்த பகுதிகள் தண்ணீருக்குள் மூழ்கியுள்ளது.

இதனால் இவ்வீதியினூடான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டு, குடிநீர் குழாய்களும் உடைந்து, குடிநீரும் தடைப்பட்டுள்ளதால், அஸ்ரப் நகர் மக்கள் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் உள்ளனர்.

பாலத்துடனான இப்பிரதான வீதி மிக மோசமாக சேதமடைந்துள்ளதால், சுமார் 10 பிரதேசங்களுக்கான போக்குவரத்துக்கள் முழுமையாகத் தடைப்பட்டுள்ளன. அஸ்ரப் நகர், தீகவாபி, பள்ளக்காடு, குடிவில், இறக்காமம், வரிப்பத்தான்சேனை, மாணிக்கமடு, அம்பாறை, உள்ளிட்ட பிரதேசங்களுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன், மாணவர்கள் கல்விப் பொதுத் தராதர சாதாரண மற்றும் உயர்தர வகுப்புக்களுக்கும் ஒலுவில் அல் - ஹம்ரா மகாவித்தியாலயத்திற்கே சென்று கல்வியை மேற்கொண்டு வருகின்றார்கள். மாணவர்களின் கல்வி பாதிக்கப்பட்டுள்ளதோடு, அஷ்ரப் நகர் பாடசாலைக்கு ஆசிரியர்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, விரைவாக இவ்வீதியைப் புனரமைப்பதற்குரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– எஸ்.எம்.ஹனீபா

கறுப்பு ஜூலையின் நாற்பதாண்டுகளின் பின் 37:

# மாவட்ட சபைகள் என்ற அரசியல் அவலம்



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

1965இல் ஆட்சியமைத்த டட்லியின் அரசாங்கத்தின் நடத்தைகள் டட்லி-செல்வா உடன்படிக்கைக்கோ சிறுபான்மையினரின் நலன்களுக்கோ சாதகமான முறையில் இருக்கவில்லை. அரசாங்கத்தால் தமிழருக்கும் எதுவும் தரவியலாது என்பது நன்றாகத் தெரிந்தது. ஆனால் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தில் தொடர்ந்து இருந்தது. அறிந்திருந்தும் வாக்குறுதி அளிக்கப்பட்ட மாவட்ட சபைகள் தமிழரசுக் கட்சியின் அரசியல் இக்கட்டான நிலையை முடிவுக்குக் கொண்டுவரவும் தங்கள் முகத்தைக் காப்பாற்றும் சூத்திரத்தை வழங்கும் என்ற நம்பிக்கையில் அது அரசாங்கத்தின் அங்கமாகத் தொடர்ந்து இருந்தது. தமிழரசுக் கட்சியைத் திருப்திப்படுத்த, 1968இல் டட்லி சேனநாயக்கா அவர்கள் ஏற்கெனவே வைத்திருந்த அதிகாரங்களைத் தவிர வேறு எந்த அதிகாரமும் இல்லாமல், முதன்மை உள்ளூராட்சி மன்றங்களை ஒன்றிணைக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட மாவட்ட சபைகள் சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் முன்வைத்தார்.

1968ஆம் ஆண்டு யூன் மாதம் 5ஆம் திகதி, மத்திய அரசின் வழிகாட்டுதல் மற்றும் கட்டுப்பாட்டின் கீழ், மாவட்ட சபைகளை நிறுவுவதற்கான முன்மொழிவுகள் குறித்த வெள்ளை அறிக்கை பாராளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. வெள்ளை அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள வரைவு மசோதாவின்படி, மாவட்ட அரசாங்க அதிபர் பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும், இந்த சபைகளின் அனைத்து ஊழியர்களும் அரசாங்க அதிபரின் கட்டுப்பாட்டில் உள்ள பொது ஊழியர்களாகவும் இருப்பார்கள். மாவட்ட கவுன்சில்கள் உள்ளாட்சி அமைப்புகளாக இருக்காது, ஆனால், கச்சேரிகளால் இப்போது செய்யப்படும் சில செயல்பாடுகளை மத்திய அரசு எடுத்துக்கொள்வதன் நீட்டிப்பாக இருக்கும்.

ஜூன் மாதம் 8ஆம் திகதி, குறித்த வெள்ளையறிக்கை பற்றிய விவாதத்தைத் தொடக்கி வைக்கப் பிரதமர் டட்லி சேனாநாயக்க எழுந்த போது, மூன்று உறுப்பினர்களைத் தவிர, சபையில் இருந்த முழு எதிர்க்கட்சியினரும், அவையில் இருந்த வெள்ளை அறிக்கையின் நகல்களை எரித்தும், கிழித்தும் விட்டு வெளிநடப்பு செய்தனர். வெளிநடப்பு செய்த உறுப்பினர்கள், எதிர்க்கட்சித் தலைவர் சிறிமாவோ பண்டாரநாயக்க தலைமையில், பாராளுமன்ற கட்டிட வளாகத்திற்கு வெளியே கூடி, குறித்த வெள்ளை அறிக்கையின் பிரதிகளை எரித்தனர்.

இது தொடர்பான விவாதத்தை எதிர்க்கட்சியினர் தொடர்ந்து புறக்கணித்தனர். ஆனால், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் துணைத்தலைவர் ஆர்.ஜி.சேனநாயக்க, கட்சியின் முடிவைப் புறக்கணித்து விவாதத்தில் கலந்து கொண்டார். அவர் நாட்டை இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகப் பிரிப்பதற்கான தனித்துவமான சாத்தியக்கூறுகளை மாவட்ட சபைகளில் காணப்படுகின்றன என்று வெள்ளை அறிக்கை மீது தாக்குதல் நடத்தினார். தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் வி.நவரத்தினம், மறுபுறம், இப்போது சபையில் முன்வைக்கப்பட்டுள்ள பிரேரணை, கட்சி பிரதமருடன் செய்துகொண்ட ஒப்பந்தத்திலிருந்து மிகவும் பரந்தளவில் விலகியுள்ளது என்றார். அது தமிழ் மக்களுக்கு எந்த நீதியையும் செய்யவில்லை என்பது மட்டுமல்ல, இது தமிழர்களுக்குப் பாதகமான 'அருவருப்பான மற்றும் கேடு விளைவிக்கும் பிரிவுகளை' உள்ளடக்கியது என்றும் வாதிட்டார்.

> 1960 ஜூன் தேர்தலில் டட்லி சேனநாயக்க தலைமையிலேயே தமிழருக்கு விரோதமான துண்டுப்பிரசுர விநியோகம் நடைபெற்றது. டட்லியின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியிலேயே இனவாதிகளே ஆதிக்கம் செலுத்தினர். அதில், ஜே.ஆர்.ஜெயவர்த்தன முதன்மையானவர்...

மாவட்ட சபைகள் முன்மொழிவுகள் மீதான மிகக் கடுமையான தாக்குதலை அரசாங்கத் தரப்பில் அமர்ந்திருந்த தமிழ் உறுப்பினரும் தமிழ் காங்கிரஸ் தலைவருமான ஜி.ஜி. பொன்னம்பலம் மேற்கொண்டார். அவர் முன்மொழிவுகளை 'அற்புதமான கலப்பு அரக்கத்தனம்' என்று அழைக்கிறார். மேலும், மாவட்ட சபைகளை நிறுவுவது இறுதியில் சிங்களவர்களையும் தமிழர்களையும் பிரிக்க வழிவகுக்கும் என்று கூறினார். குறித்த வெள்ளையறிக்கை மீதான 18ஆம் திகதி முடிவடைந்ததும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்பட்டது. மாவட்ட சபைகளை எப்போது முதல் நடைமுறைப்படுத்துவது என்பது பற்றி பிரதமர் எதுவித திகதியையும் குறிப்பிடவில்லை.

மாவட்ட சபைகள் சிங்கள மக்களுக்குப் பாதகமான வகையில் நாட்டைப் பிளவுபடுத்தும் சாதனம் என்று குற்றம் சாட்டப்பட்டது. மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடங்களின் பௌத்த மகாநாயக்கர்களும், அகில இலங்கை பௌத்த காங்கிரஸின் பிரதிநிதியும் முன்மொழியப்பட்ட மாவட்ட சபைகளுக்கு தங்கள் எதிர்ப்பை தெரிவித்தார்கள். சிங்களப் பிரதேசங்களில் உள்ள பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களும் சிங்கள அரசியல், சமூக, சமய மற்றும் கலாசார அமைப்புகளும் இந்த பிரேரணையை அரசாங்கம் கைவிடக் கோரி தீர்மானங்களை நிறைவேற்றின. மாவட்ட சபைகளுக்கு எதிரான பெருகிவரும் திட்டமிடப்பட்ட பிரச்சாரம் மாவட்ட சபைகள் குறித்த சட்டமூலம் மசோதா பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலுக்குள் உள்ளடக்கப்படுமா என்ற ஐயத்தை எழுப்பியது.

எதிர்பார்த்தபடி, ஜூலை மாதம் 7ஆம் திகதி பாராளுமன்ற அமர்வு சிம்மாசன உரையுடன் (அரசாங்கத்தின் கொள்கை விளக்கவுரை) தொடங்கியபோது, மாவட்ட சபைகள் பற்றிய குறிப்புகள் எதுவும் அவ்வுரையில் இடம்பெற்றிருக்கவில்லை. ஜூலை 25ஆம் திகதி சிம்மாசன உரை மீதான விவாதத்தை நிறைவு செய்து உரையாற்றிய பிரதமர், பெரும்பான்மையான மக்கள் விருப்பம் தெரிவிக்காமையால் மாவட்ட சபைகள் தொடர்பான முன்மொழிவுகளைக் கைவிடுவதாக அறிவித்தார்.

இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், இந்த அதிகாரமற்ற மாவட்ட சபைகள் மீதுகூட சிங்கள பௌத்த பேரினவாதம் தனது தாக்குதலைத் தொடுத்தது. டட்லி பீதியடைந்து, தனது ஆபத்தான ஆரவுத் தளத்தைப் பாதிக்கக்கூடிய புயலில் சிக்கிக் கொள்ள விரும்பாமல், விரைவாக இந்தத் திட்டத்தைக் கைவிட்டார். தமிழர்கள் மீண்டும் ஒரு குருட்டுப் பாதையை அடைந்தனர். நம்பிக்கையற்ற உணர்வு அவர்களைச் சூழ்ந்தது. ஆனால் இக்காலப்பகுதியில் அரசாங்கத்துடன் குடித்தனம் நடத்திய தமிழரசுக் கட்சியினரின் நடத்தை விமர்சனத்துக்குரியதானது.

1965இல் ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்திற் பங்காளிகளாகச் சேர்ந்ததன் மூலம் தமிழரசுக் கட்சி தனது முன்னைய அடையாளத்தின் சில முற்போக்கான அடையாளங்களை அப்பட்டமாகவே அழித்துக் கொண்டது. ஐக்கிய தேசியக் கட்சியுடனான இக்கூட்டு மூலம், தமிழ்க் காங்கிரஸ் போலத் தமிழரசுக் கட்சியும் ஒரு 'தமிழ் யூ.என்.பி.' என்ற படிமம் உறுதியானது. இது தோற்றத்தில் மாற்றம் என்றில்லாமல் சாராம்சத்திலேயே ஐக்கிய தேசியக் கட்சியுடன் தமிழரசுத் தலைமை கண்டுகொண்ட ஒரு புதிய அடையாள ஒற்றுமை என்பதை வலியுறுத்தும் விதமாகவே 1965-70 கால இடைவெளியில் தமிழரசுக் கட்சித் தலைவர்கள் பெரும்பாலோர் நடந்து கொண்டனர்.

1965-70 காலப்பகுதியில் கடைந்தெடுத்த சிங்கள இனவாதிகள் பங்குபற்றிய ஒரு ஆட்சியில் தமிழ்க் காங்கிரஸ் இணைந்திருந்தது வியப்பல்ல. ஏனெனில், அதன் கடந்தகாலம் அப்படிப்பட்டது. இதற்குள் தமிழரசுக் கட்சியும் கூட்டாளியாக இணைந்த அரசியல் அவலத்தை விளக்க சில அபத்தமான கதைகள் சொல்லப்பட்டன. இன்றும் சொல்லப்படுகின்றன. அதில் முதன்மையானது, பிரதமர் டட்லி சேனநாயக்க ஒரு கனவான், சொன்ன வார்த்தை தவறமாட்டார் என்ற நம்பிக்கையின் பேரில், தமிழரசுக் கட்சி யூ.என்.பி.யுடன் கூட்டாட்சிக்கு உடன்பட்டது. இது காரணம் என்றால் இலங்கையின் அரசியல் வரலாறு பற்றி எதுவுமே தெரியாதவர்களா தமிழரசுக் கட்சித் தலைவர்கள். 1953 ஹர்த்தாலின் பின்னரான டட்லியின் அரசியல் அஞ்ஞாதவாசம் அவர் உறுதியான தலைவரல்ல என்பதைக் காட்டியது. 1960 ஜூன் தேர்தலில் டட்லி சேனநாயக்க தலைமையிலேயே தமிழருக்கு விரோதமான துண்டுப்பிரசுர விநியோகம் நடைபெற்றது.

டட்லியின் தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சியிலேயே இனவாதிகளே ஆதிக்கம் செலுத்தினர். அதில், ஜே.ஆர். ஜெயவர்த்தன முதன்மையானவர். இத்தகைய ஒரு பின்னணியில் டட்லி - செல்வா உடன்படிக்கை எனப்பட்ட இரகசிய ஏற்பாட்டை எதிர்க்கட்சிகள் எதிர்க்காமல் விட்டிருந்தாலுங் கூட, அதற்கு ஆளும் கட்சியின் உள்ளிருந்தே குழி பறிக்கப் பலர் காத்திருந்தனர் என்பது தமிழரசுக் கட்சிக்கு விளங்காமல் இருக்க வாய்ப்பில்லை. அப்படியாயின் ஏன் தமிழரசுக் கட்சி அரசாங்கத்தை நம்பி ஆதரவு வழங்கியது என்பது வினா.

தமிழரசுக் கட்சி தனது பாராளுமன்ற ஆசன எண்ணிக்கை வலிமையைக் காட்டி, அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்காக மிரட்ட, தான் கேட்டதைப் பெற முடியும் என்று எண்ணி இருந்தது என்பது காரணம் என்று சொல்வோர் இருக்கிறார்கள். இவ்வாறான ஒரு மமதை தமிழரசுக் கட்சியிடம் இருந்தது உண்மை, ஆனால், இது யதார்த்தமற்றது என்பதை விரைவிலேயே தமிழரசுக் கட்சி புரிந்திருக்க வேண்டும்.

ஏன் தமிழரசுக் கட்சி அரசாங்கத்துடன் இணைந்து முட்டுக்கொடுத்தது? தமிழரசுக் கட்சித் தலைமை வெகுஜன அரசியலுக்கும் தனக்கும் வெகுதூரம் என்பதை அறிந்து விட்டது. பாராளுமன்ற அரசியல் மூலம் எதையாவது சாதிப்பது என்றால், ஆளுங்கட்சியுடன் உறவாடியே அதைச் செய்யலாம் என்று அது நம்பியது. மேலும், தமிழ் மக்களின் பெயரால் தங்களது தனிப்பட்ட நலன்களை உறுதிசெய்ய முடிந்தது.

இதற்காக அரங்கேறியதே மாவட்ட சபைகள் என்ற அவலம்.

Business Today TOP 40

# 2022 - 2023 இல் SLT-MOBITEL

## SLT-MOBITEL, Business Today's TOP 40 2022-2023 தரப்படுத்தலில் உள்வாங்கப்பட்ட தொலைத்தொடர்பாடல் தொழிற்துறையைச் சேர்ந்த நிறுவனமாக ஆதிக்கம் செலுத்தியிருந்தது.

அண்மையில் வெளியிடப்பட்ட சிறந்த 40 நிறுவன தரப்படுத்தலில் உள்வாங்கப்பட்ட ஒரே தொலைத்தொடர்பாடல் சேவை வழங்குநராக SLT-MOBITEL அடங்கியிருந்தது. அர்ப்பணிப்பு மற்றும் புத்தாக்கம் போன்றவற்றுக்காக கௌரவிப்பைப் பெற்றுள்ளதுடன், நிறுவனத்தின் மீட்சி மற்றும் சவால்களை கடந்து சென்றிருந்தமைக்கான கௌரவிப்பாகவும் அமைந்திருந்தது.

Business Today இன் வருடாந்த TOP 40 தரப்படுத்தல் என்பது, இலங்கையில் அதிகளவு ஆதிக்கம் செலுத்தும் நிறுவனங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. தொலைத்தொடர்பாடல் துறையில் பெருமைக்குரிய நிரலில் ஒன்றாக SLT-MOBITEL உள்வாங்கப்பட்டிருந்ததுடன், தேசத்தின் டிஜிட்டல் சூழலில் முக்கிய பங்கை வகிக்கின்றது.

பரந்தளவு இணைப்புத்திறனை வழங்குவது மற்றும் டிஜிட்டல் பாகுபாட்டு இடைவெளியை நிவர்த்தி செய்வது, பெருமளவு இணைப்புடன் மற்றும் தொழில்நுட்ப ரீதியில் முன்னேற்றத்துக்கான எதிர்காலத்துக்கு கொண்டு செல்வதற்கு புத்தாக்கமான செயற்பாடுகளை வழிநடத்திச் செல்வதற்கு SLT-MOBITEL இலங்கைக்கு உதவியாக அமைந்திருப்பதை கௌரவிக்கும் வகையில் இந்த தரப்படுத்தல் அமைந்துள்ளது.

மேலும், Business Today TOP 40 தரப்படுத்தலினால் பல்வேறு காரணிகள் கவனத்தில் கொள்ளப்படுவதுடன், இதில் நிதிசார் வினைத்திறன், மூலோபாய செயற்பாடுகள் மற்றும் தொழிற்துறை போக்குகளில் தாக்கம் போன்றனவும் அடங்கியிருந்தன.

தொடர்ச்சியான வளர்ச்சிக்குப் பங்களிப்பு வழங்கியிருந்த நிறுவனத்தின் பிரதான சாதனைகளையும் இந்த தரப்படுத்தல்கள் உள்வாங்கியிருந்தன. அதில் நிறுவனத்தின் ஃபைபர் வலையமைப்பு 65,000 கிலோமீற்றர்களுக்கு அப்பால் விரிவாக்கம், ஸ்மார்ட் டிஜிட்டல் பொருளாதாரத்துக்காக உட்கட்டமைப்பை வலிமைப்படுத்தல், அதன் Embryo வசதியூடாக R&D ஆற்றல்களை ஊக்குவித்து, பங்காண்மைகளை கட்டியெழுப்பி, AI/ML, metaverse மற்றும் பல புத்தாக்கமான சேவைகளை அறிமுகம் செய்திருந்தது.




இலங்கையர்களுக்கு நவீன தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளினூடாக வலுவூட்டுவதற்கு SLT-MOBITEL தன்னை அர்ப்பணித்துள்ளதுடன், தொழில்நுட்பங்களில் முதலீடு மற்றும் வாடிக்கையாளர்களின் அதிகரித்துச் செல்லும் தேவைகள் மற்றும் தேசத்தின் டிஜிட்டல் நிகழ்ச்சி நிரலுக்கு பங்களிப்பு செய்யக்கூடிய மாற்றியமைக்கத்தக்க தீர்வுகளில் பங்களிப்பு வழங்குவது போன்றவற்றிலும் தன்னை ஈடுபடுத்தியுள்ளது.

இலங்கையின் தேசிய தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகள் வழங்குநர் எனும் வகையில், தொழிற்துறை, நிறுவனங்கள் மற்றும் வாழ்க்கைமுறை முன்னேற்றத்துக்கு SLT-MOBITEL வலுவூட்டுகின்றது. கிராமிய பின்தங்கிய சமூகங்களை இணைப்பது முதல், நவீன தீர்வுகளினூடாக வியாபாரங்களை மாற்றியமைப்பது வரையிலும் SLT-MOBITEL இனால் தேசிய அபிவிருத்திக்குத் தனது சிறந்த இணைப்புத்திறனினூடாக பங்களிப்பு வழங்கப்படுகின்றது. பல்வேறு துறைகளுடன் கைகோர்த்தல், உற்பத்தித்திறனை அதிகரித்தல் மற்றும் பொருளாதார வளர்ச்சி, டிஜிட்டல் உள்ளடக்கத்தை வலிமைப்படுத்தல் மற்றும் எதிர்காலத்துக்குத் தயாரான தொழில்நுட்பங்களினூடாக நிறுவனசார் தீர்வுகளை வழங்கல் போன்றவற்றினூடாக இலங்கையின் முன்னேற்றத்துக்கு SLT-MOBITEL பங்களிப்பு வழங்குகின்றது. தேசம் மேம்படும் நிலையில்,

SLT-MOBITEL இனால் தொடர்ந்தும் தொழில்நுட்பம் மற்றும் இணைப்புத்திறன் போன்றவற்றினூடாக வலுவூட்டல் வழங்கப்படுகின்றது.

# 2024 இல் Daraz இன் முதல் இலவச விநியோக கொண்டாட்டம் அறிமுகம்

ஒன்லைன் e-வணிக கட்டமைப்பான Daraz, புத்தாண்டை வரவேற்கும் வகையில், முதன்முறையாக Daraz இலவச விநியோக கொண்டாட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. 2024 ஜனவரி 27ஆம் திகதி முதல் நடைபெறும் இந்தக் கொண்டாட்டத்தில், நாடு முழுவதையும் சேர்ந்த வாடிக்கையாளர்களுக்கு நவநாகரீகம், அழகுசாதனப் பொருட்கள், வீட்டு மற்றும் அலங்காரப் பொருட்கள் மற்றும் பல மில்லியன் கணக்கான பொருட்களை இலவசமாக விநியோகித்துக் கொள்ளக்கூடிய வசதியை அனுபவிக்க முடியும். தெற்காசிய பிராந்தியத்தைச் சேர்ந்த சமூகங்கள் மீதான Daraz இன் அர்ப்பணிப்பு இந்தத் திட்டத்தினூடாக மேலும் உறுதி செய்யப்பட்டுள்ளதுடன், நாடளாவிய ரீதியில் ஒப்பற்ற விநியோகம் மற்றும் பொருட்களை இலகுவாக அணுகும் திறன் போன்றவற்றுக்கான உட்கட்டமைப்பு மற்றும் உயர் தொழில்நுட்பம் மற்றும் விருத்தியை கொண்டுள்ளமையை வெளிப்படுத்தியுள்ளது.


எதிர்வரும் Daraz இலவச விநியோக கொண்டாட்டத்தின் நோக்கம் என்பது, நபர்களுக்கு தமது இருப்பிடம் ஏதுவாக இருப்பினும், அணுகும் திறனை ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் சமூகத்தாருக்கு தமது தினசரி தேவைகளை மிகவும் சகாயமான முறையில் அணுகும் வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாகவும் அமைந்துள்ளது. எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாகவும், பெறுமதி சேர் வரி மாற்ற அதிகரிப்பாலும் போக்குவரத்து செலவுகள் அதிகரித்துள்ளதன் தாக்கத்தைக் குறைக்கும் வகையில், இந்தக் கொண்டாட்டத்தினூடாக, சொப்பிங் செய்வோரின் சேமிப்பை அதிகரித்துக் கொள்ளப் பங்களிப்பு வழங்க எதிர்பார்க்கப்படுகின்றது. வாடிக்கையாளர்களுக்கு தமது இல்லங்களில் இருந்தவாறே சௌகரியமாகப் பொருட்களைக் கொள்வனவு செய்யும் வசதியை வழங்குவதுடன், அதிகரித்துச் செல்லும் விநியோக செலவுச் சுமையை இல்லாமல் செய்வதும் எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தத் திட்டத்தினூடாக, விநியோக கட்டணம் காரணமாக e-வணிகத்தில் ஈடுபடுவதைத் தவிர்க்கும் வாடிக்கையாளர்களை மீண்டும் ஈடுபடுத்தி, ஒன்லைன் சொப்பிங் அனுபவத்தில் அவர்களின் ஈடுபாட்டைத் தொடர்ந்தும் ஊக்குவிக்கவும், அதனூடாக இலங்கையின் டிஜிட்டல் பொருளாதாரத்தை மேம்படுத்தவும் Daraz எதிர்பார்க்கின்றது. e-வணிக செயற்பாடுகளில் இலவச விநியோக நடவடிக்கையைப் பல சொப்பிங் செய்வோர் மிகவும் பயனுள்ளதாகவும், அனுகூலமளிப்பதாகவும் தெரிவித்துள்ளமையை புள்ளிவிவரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. உதாரணமாக, 2023 டிசம்பர் மாதத்தில் மாத்திரம், 65% க்கும் அதிகமான Daraz வாடிக்கையாளர்கள் இலவச விநியோகத்தை அனுபவித்துள்ளதுடன், 2023 ஜனவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் 700% அதிகரிப்பையும் வெளிப்படுத்தியிருந்தனர்.

மேலும், Daraz இலவச விநியோக கொண்டாட்டத்தினூடாக, விற்பனையாளர்களுக்கும்



முன்னர் சென்றடையாத பகுதிகளுக்கு தமது பொருட்களை சென்றடையச் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், அதிகளவு வளர்ச்சிக்கான வாய்ப்புகளை வழங்கியுள்ளது. சிறிய மற்றும் நடுத்தரளவு வியாபாரங்களுக்கு (SMEs) தமது வியாபாரங்களை இதுவரையில் இனங்காணாத பகுதிகளுக்கு வியாபித்து, தமது பிரசன்னத்தை மேம்படுத்தவும், தமது சென்றடைவு மற்றும் வருமானத்தை குறிப்பிடத்தக்களவு அதிகரித்துக் கொள்வதற்கும் வாய்ப்பை வழங்குவதாக அமைந்துள்ளது. உதாரணமாக, Daraz இல் விற்பனையாளர்கள் தமது நகரத்திலிருந்து வெளிப்பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு 65% ஆன பொருட்களை விற்பனை செய்திருந்தனர். இந்த போக்கிற்கமைய, பல விற்பனையாளர்கள் தமது வியாபாரத்தை மேம்படுத்திக் கொள்வதற்கு இலவச விநியோகத்தை அதிகளவு நாடுவதை அவதானிக்க முடிகின்றது. 2023 ஆம் ஆண்டின் இறுதி காலாண்டில் மாத்திரம் இலவச விநியோகத்தில் பங்கேற்றிருந்த விற்பனையாளர்களின் எண்ணிக்கையில் 30% வளர்ச்சி பதிவாகியிருந்தது.

Daraz ஸ்ரீலங்கா செயற்பாடுகளுக்கான பணிப்பாளர் சஜித் சுஹைலி கருத்துத் தெரிவிக்கையில், "இலங்கையின் அனைத்து பாகங்களுக்கும் விநியோகம் என்பது, நாட்டில் e-வணிக பயன்பாட்டைத் தொடர்ச்சியாகவும், மீண்டும் மீண்டும் பயன்படுத்துவதை ஊக்குவிப்பதற்கு அத்தியாவசியமானதாக அமைந்துள்ளது. பெருமளவு சரக்கு கையாளல் மற்றும் செயற்பாட்டு வலையமைப்பு என்பது இதற்கு அவசியமாவதுடன், இலங்கையின் நீடித்த பரந்த வாகனத் தொடரணியையும், விநியோக பங்காளர்களையும் Daraz கொண்டுள்ளதுடன், அவர்களினூடாக வேகமான விநியோகத்தைக் கொண்டு விற்பனையாளர்கள் மற்றும் கொள்வனவாளர்களை இணைக்கின்றது. எமது இலவச விநியோக கொண்டாட்ட காலப்பகுதியில் இந்தச் சேவை முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகின்றது. இந்த பிரத்தியேகமான, நாடளாவிய சரக்கு கையாளல் உட்கட்டமைப்பு என்பது எமது நவீனத் தொழில்நுட்ப வசதியுடன் வலுவூட்டப்பட்டுள்ளதுடன், உடனுக்குடன் கண்காணித்தல் மற்றும் போக்குவரத்து வழியைச் செம்மையாக்கிக் கொண்டு, Daraz இன் நோக்கமான பொதிகளை வேகமாகவும் சகாயமான விலைகளில் விநியோகிக்கவும் பங்களிப்பு வழங்குகின்றது." என்றார்.



## உடைந்த கதிரைகள்

மரக்கறி விலையை
பயத்துடன் கேட்டு
காதோரம் வியர்வை வடிய
துடைத்துக்கொண்டதை
யாரும் பார்க்கவில்லை...

வேலியில் முடக்கத்தான்
சிறு காட்டுக்குள் மாம்பாஞ்சான்
குளத்துக்கரை கீரைகள்
அழித்து கட்டிய சந்தையில்தான்
கைகட்டி நிற்கின்றேன்...


வெற்றுப் பையில்
எதை சுமப்பது
ஊரோடு ஒத்தோடும்
கஞ்சி வாழ்க்கையில்
மீதம் ஒன்றும் இல்லை
வெற்று நடையில்தான்
அதிகம் வீடு வர முடிகின்றது...

வீதியால்
பழைய இரும்பு, பித்தளை, தகடுகள்
பழைய புத்தகம் கொப்பிகள் ,
உடைந்த கதிரைகள் வாங்க
உலாவரும் வண்டிக்காரன்
இன்றும் வருகின்றான்...

அவனிடம் எப்படியாவது
இன்று சொல்லிவிட வேண்டும்
உடைந்த கதிரைகள் எல்லாம்
பல காலங்களாக
எங்களை ஆளும் மன்றத்தில்
மட்டும்தான் இருக்கின்றது என்று...

–காரையன் கதன்





## மின்னல்

மென்பச்சை 'வட்ஸ் அப்'
வயலில் கறுப்பு
விதைகளை
பயிரிட்டிருக்கிறாய்...

வன்துளிகளால்
நிறைகிறது இந்த
மாரி...

தவறவிடப்பட்ட முத்தம்
அல்லது
தாமதமான சந்திப்பு
குறித்தோ
மழையாலான இந்த
சொற்கள்...

மென்கோடையை
பிரசவிக்கும்
வித்தை தெரிந்த எனக்கு
இது மூவர்ண
சொற்களின் கணம்...

'ம்'
'அப்புறம்'
'சொல்லுங்க' ...

–லலித்தா–





## மகிழ் மழைக்காலம்

வெள்ளி வேர் மின்னலாய்
வான் வந்து மறைந்த போதும்
செல் போலே இடி முழக்கம்
செவி வந்து சேர்ந்த போதும்...

மண்வாசம் மெல்ல மெல்ல
மூக்கினில் நிறைந்த போதும்
வெண் மேகக் கூட்டம் எல்லாம்
வானில் கருமேகம் ஆனபோதும்...

மழை மேக சாரல் என்னை
மொத்தமாய் நனைத்த போதும்
மழை சிதறிய முத்துக்களில்
முகம் நனைத்து மகிழ்ந்த போதும்...

வீதியிலே பள்ளங்களை விட்டு
விலகிச் செல்லும் போதும்
சாரலாய் நினைவில் வரும்
என் சின்னஞ்சிறிய பள்ளிக்காலம்...

(மழைக்குருவி)
மனோஜா இரத்தினகுமார்

## யுகம்

பூமி ஒருநாள்
சிதைந்துபோய்–
பூகம்பத்தைப் பிறப்பிக்கும்...

மானுடத்தைக் கண்டு
வானம் கண்ணீர் சிந்தும்
உருவங்கள் சிதைந்து போகும்...

உணவிற்காக–
ஆயிரம் கைகள் மேலெழும்
மின்சாரம் இல்லாத வீடுகள்
வெளிச்சம் தேடி
தவம் செய்யும்...

வீதி முழுவதிலும்
வெற்று வாகனங்கள்
அடுக்கப்பட்டு கிடக்கும்...

பச்சையம் இழந்த
குழந்தைகள்
வீதியில் வீழ்ந்து
எதிர்காலம் தேடும்...

ஆட்சியாளர்கள் –
வீதிக்குவர அஞ்சுவார்கள்
வேற்று நாட்டுப் பறவைகள்
அலகுகளில் உணவு

சுமந்து வரும்...

வரிச் சுமைகள் –
தாங்கமுடியாமல் –
மானுடம் நொந்து போகும்...

வைத்தியசாலைகள்–
மருந்துகள் இல்லாமல்
நீண்ட உறக்கம் கொள்ளும்...

சம்பூர் தாசன்.யோகானந்தன்



# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் – ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.


சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





## "எதிர்கால சந்தியிர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!





## பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:



**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**



## நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :.........................................
மாகாணம் :.....................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024 விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர் :**......................................................................

**பிரிவு :** ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை :**......................................................................

**மாகாணம் :**......................................................................

**வீட்டு முகவரி :**......................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர் :**......................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம் :**......................................................................

**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் ........................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

..................................................
அதிபரின் கையொப்பம்

கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான்

# சர்வதேச தலைவராக உருவெடுக்கிறார்












கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் சர்வதேச தமிழ் தலைவராக அங்கீகரிக்கப்பட்டு வருகிறார். திருக்கோணமலையில் தமிழர்களின் கலாசார நிகழ்வுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டு, தமிழ் மக்கள் மனதில் அது வடுவாக நிலைகொண்டிருந்த தருணத்தில், செந்தில் தொண்டமானால் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த பொங்கல் விழா, எந்த வித விமர்சனங்களும் இன்றி, உலக தமிழர்களும் போற்றக்கூடிய வகையில் வரலாற்றில் இடம்பெற்றது.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, புதுடெல்லியில் இந்திய தபால் துறை மற்றும் பாரதிய ஜனதா கட்சி (பா.ஜ.க) இணைந்து முத்திரை வெளியிடப்பட்ட போது, முதல் முத்திரையை செந்தில் தொண்டமான் பெற்றக்கொண்டார்.

தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் சிறப்பு அழைப்பிதழின் பேரில் அயலக தமிழர் மாநாட்டில் செந்தில் தொண்டமான் கலந்துக்துக்கொண்டமை சிறப்பம்சமாகும்.

அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டிற்கு அமைச்சர் உதயநிதி ஸ்டாலினினுடன் ஆளுநர் செந்தில் தொண்டமான் சிறப்பு விருந்தினராக அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதுமாத்திரமன்றி, பிரான்சில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் சிலையை செந்தில் தொண்டமான அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின்போது, இந்திய அரசிடம் இருந்து 1 பில்லியன் அமெரிக் டொலர் கடன் உதவி பெற்றுக்கொடுத்ததுடன், தமிழக அரசிடம் இருந்து இலங்கை மக்களுக்கு 40 ஆயிரம் மெட்ரிக் தொன் அரிசி,100 மெட்ரிக் தொன் மருந்து 500 மெட்ரிக் தொன் பால் மா என்பவற்றைப் பெற்றுக்கொடுத்தமை உட்பட பல்வேறுபட்ட சேவைகளை மக்களுக்காக செந்தில் தொண்டமான் செய்துள்ளார்.

மேலே குறிப்பிட்ட விவகாரங்கள் தொடர்பில் அவருடன் இடம்பெற்ற கலந்துரையாடலில்...

**கேள்வி:** கிழக்கில் பொங்கல் விழாவை சிறப்பாக செய்தீர்கள். அதன் பின்னணி என்ன?

**பதில்:** கடந்த காலங்களில் திருக்கோணமலையில் தமிழ் கலாசார நிகழ்ச்சி நடக்கும் போது, தமிழர்கள் தாக்கப்பட்டு விரட்டி அடிக்கப்பட்டதாகக் கருத்து உலாவி வருகின்றது.பொங்கல் விழா ஊடாக மக்கள் தங்களது கலாசாரத்தை உணர்ந்து 1,008 பொங்கல் பானைகள், 1,500 பரதநாட்டிய கலைஞர்கள், 500 கோலங்களுடன் எவரும் குறைகளைச் சுட்டிக்காட்ட முடியாதளவு பொங்கல் விழாவைச் சிறப்பாக முன்னெடுத்து தமிழ் கலாசாரத்தின் அடையாளத்தை நிலைநாட்டிய பெருமை எனக்கு உள்ளது.

**கேள்வி:** இலங்கையில் ஜல்லிக்கட்டு எப்படி சாத்தியமானது?

ஜல்லிக்கட்டைப் பொறுத்தவரை அது ஒரு தமிழ் கலாசார விளையாட்டு. ஜல்லிக்கட்டைத் தமிழ் நாட்டில் நிலைநாட்டப் பல போராட்டங்கள் பல விழிப்புணர்வு செயற்பாடுகள் முன்னெடுத்துள்ளேன். அது மாணவர் எழுச்சியுடன் வெற்றி வாகை சூடி தமிழகம் முழுவதும் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

தமிழ்நாட்டு ஜல்லிக்கட்டு பாதுகாப்பு நலச் சங்கத்துடன் இணைந்து,வெற்றிகரமாக ஜல்லிக்கட்டை இலங்கையில் நடத்தியதன் மூலம் ஜல்லிக்கட்டுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்தது.

**கேள்வி:** பா.ஜ.க., தி.மு.கவும் வெவ்வேறு கொள்கையில் இருக்கும் போதும் தாங்கள் ஒருவரை மட்டும் இரு தரப்பினரும் ஆதரிப்பது எப்படி?

இலங்கையில் பல அரசியல் தலைவர்கள் பா.ஜ.கவுடன் தொடர்பில் இருந்தாலும், என்னுடைய கடந்தகால நடவடிக்கைகளைக் கருத்தில் கொண்டு, மக்களுக்கு ஒரு சிறந்த தலைமைத்துவத்தை என்னால் வழங்க முடியும் என்பதை உணர்ந்து, எனக்கு ஆதரவாக உள்ளனர்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 ஆண்டுகள் நிறைவடைந்ததை நினைவு கூறும் வகையில் தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை ஏற்பாட்டில் முத்திரை வெளியிடும் நிகழ்வு அண்மையில் புதுடெல்லியில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்குச் சிறப்பு விருந்தினராக நான் அழைக்கப்பட்டு, இந்தியத் தபால் அமைச்சுடன் இணைந்து பா.ஜ.க தேசிய தலைவர் பி.பி.நாடா முத்திரையின் முதலாவது பிரதியை எனக்கு வழங்கி என்னூடாக மலையக மக்கள் கௌரவிக்கப்பட்டனர்.

**கேள்வி:** அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் உதயநிதி ஸ்டாலின் தங்களுடைய காளைகளுக்கு தங்க காசை பரிசாக வாங்கினாரா?

உதயநிதி ஸ்டாலின் தமிழகத்தில் அவரது அமைச்சு ஊடாக சிறப்பாகச் சேவை செய்து வருகிறார். அதேவேளை, விளையாட்டுத்துறை அமைச்சர் என்ற வகையில், தமிழ் கலாசார விளையாட்டுக்களை ஊக்குவித்தும் வருகிறார். அப்படி இருக்கும் சூழ்நிலையில், அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டுக்கு எனக்குச் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்குமாறு அழைப்புவிடுக்கப்பட்டது. அந்த ஜல்லிக்கட்டில் எனது காளைகள் வெற்றிபெற்றதையடுத்து, உதயநிதி ஸ்டாலின், அமைச்சர் மூர்த்தி ஆகியோரால் தங்கக் காசு பரிசாக வழங்கி வைக்கப்பட்டது.

**கேள்வி:** பிரான்ஸில் நிர்மாணிக்கப்பட்ட திருவள்ளுவர் சிலைக்கு தங்களுக்கு மாத்திரம் சிறப்பு விருந்தினராக அழைப்பிதழ் வழங்கப்பட்டது காரணம் என்ன?

பிரதமர் மோடியின் தமிழ் கலாசாரத்தை உலகம் முழுவதும் வளர்க்கும் வேலைத்திட்டத்தின் கீழ் பிரான்ஸ் அரசாங்கத்துடன் இணைந்து பிரான்ஸ் கிலர்ஜியில் திருவள்ளுவர் சிலையை நிர்மாணிக்க ஏற்பாடு செய்தார். அதற்கு உலக ரீதியில் தமிழுக்காகச் சேவை செய்யும் சிறந்த தலைவர்களை இனங்கண்டு, அதில் என்னைச் சிறப்பு விருந்தினராக அழைக்குமாறு அழைப்பிதழ் வழங்கியதன் ஊடாக, நான் அந்நிகழ்வில் கலந்துகொண்டு திருவள்ளுவர் சிலையை உத்தியோகப்பூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்தேன்.

**கேள்வி:** IMF தங்களுடைய நிர்வாகத்திறன் பற்றி பாராட்டி கருத்து தெரிவித்துள்ளனரே?

IMF பொருத்தமட்டில் நாடு முழுவதும் சென்று இலங்கை தங்களுக்குச் செலுத்தவுள்ள கடன் தொகை எப்படி மீள் செலுத்தப் போகிறார்கள் என்பதை ஆய்வு செய்வதோடு, மக்களின் இயல்பு வாழ்க்கையைப் பார்வையிட்டு வரும் நிலையில், கிழக்கு மாகாணத்தை பொருத்தமட்டில் நான் ஆளுநராகப் பொறுப்பேற்றுச் செய்த வேலைத்திட்டங்கள்,எதிர்கால வேலைத்திட்டங்கள் குறித்து முழுமையாக ஆய்வு செய்தனர். கிழக்கு மாகாணம் சீராகச் செயற்படுவதாகப் பாராட்டினர். கிழக்கு மாகாணம் முழுமையாக வளர்ச்சி அடைந்தால் இலங்கையில் உள்ள முழுக் கடனையும் கிழக்கு மாகாணத்திலிருந்து ஒரு மாதத்திற்குள் கட்ட முடியும் என்பதை அவர்களிடம் தெளிவுபடுத்தினேன். அதற்கான வேலைத்திட்டங்களின் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்தேன் என்றார்.

**கேள்வி:** இந்திய வம்சாவளியினர் அகற்றப்பட்டது நடைமுறையில் உள்ளதா?

இந்திய வம்சாவளியினர் என்பது பிறப்பு இறப்பு சான்றிதழ்களில் அகற்றப்பட்டு சுற்றறிக்கை வெளியிடப்பட்ட போது, நான் இலங்கை பிரஜை என்பதில் எந்தவித மாற்றுக்கருத்தும் கிடையாது. ஆனால், என்னுடைய பூர்வீகம் என்ன என்பதை முடிவு செய்யும் அதிகாரம் இலங்கை அரசுக்கு கிடையாது. அந்த அதிகாரம் தனிப்பட்ட நபர்களைச் சார்ந்தது. தனிப்பட்ட உரிமைகளில் யாரும் தலையிட முடியாது என கடுமையாக எதிர்ப்பு தெரிவித்ததோடு, போராட்டங்கள் முன்னெடுக்கப்படும் என எச்சரித்தேன். அதற்கமைய மீண்டும் சுற்றறிக்கை மாற்றியமைக்கப்பட்டது.



# பார்த்ததும் காதலா?



சம்பூர் சமரன்
(திருகோணமலை)

காலை ஆறுமணி இருக்கும் கரன் தன் நண்பர்களுடன் சுற்றுலா செல்ல ஆயத்தமாகி கொண்டிருந்தான். தனியார் பேருந்து ஒன்றில் ஒருநாள் சுற்றுலா அது. பேருந்தில் ஏறிய பொழுது தொடங்கி, ஒரே ஆட்டமும் பாட்டமும் தான். கரனுக்கு மூன்று நண்பர்கள் இருந்தார்கள் அவர்கள் கரனுக்கு மிக நெருக்கமானவர்கள். அவர்களுடன் அடிக்கடி பேசிக்கொண்டே பயணம் மேற்கொண்டிருந்தான். பேருந்தில் பெண் நண்பர்களும் இருந்தார்கள் எனினும், அவர்களுடன் பேசுவதற்கும் பழகுவதற்கும் கரன் தயக்கம் காட்டினான். இப்படியே சுமார் நான்கு மணி நேர பயணத்தின் பின்னர் தாவரவியல் பூங்காவை அடைந்தார்கள். அது மிகவும் பிரபலமான அரச பூங்காவாகும். நுழைவாயிலில் அனுமதிச்சீட்டை பெற்றவுடன் பேருந்தில் வந்த அனைவரும் ஆளுக்கொரு திசையில் தமக்கு பிடித்தமான நண்பர்களுடன் பூங்காவை சுற்றிப் பார்க்க சென்றனர்.

கரன் தனது நண்பர்களுடன் பூங்காவின் அழகை ரசித்துக் கொண்டிருந்தான். அன்று விடுமுறை தினம் என்பதால் சனக்கூட்டம் சற்று அதிகமாகவே இருந்தது. நிறைய பாடசாலை சிறுவர்கள் வெள்ளைப் புறாக்கள் போல் பசும்புற்றறைகளிலேயே அங்குமிங்கும் ஓடித்திரிந்தனர். அவர்களுக்கு பொறுப்பாக வந்திருந்த ஆசிரியர்கள் இருவர், மூவராகக்கூடி பேசிக்கொண்டே பிள்ளைகளையும் கண்காணித்துக் கொண்டிருந்தார்கள். இன்னும் வயதானவர்கள் மற்றும் குடும்பத்தினர் என பல்வேறுபட்ட மக்களும் பூங்காவிலே நிரம்பியிருந்தார்கள். இதையெல்லாம் கண்டவர்களாக கரனும் அவனது நண்பர்களும் ஒரு மரநிழலிலே காலை வெயிலுக்காக ஒதுங்கி நின்று பேசிக்கொண்டிருக்கும் போது, அங்கே கண்ட காட்சியில் கரனின் கண்கள் அகல விரிந்தன. ஆம், அங்கு வெண்மை நிற உடையுடன் அழகான தோற்றமுடைய ஒரு யுவதியை கண்டான்.

முன்னொரு பொழுதும் அவன் பார்க்காத முகம் அது. அப்படியே லயித்துப் போய் நின்றான். கரனின் முக மாற்றத்தை கண்டுகொண்ட அவனது நண்பர்களில் ஒருவனான விமல் ‘மச்சான், என்னடா உன் முகம் இப்படி மாறி இருக்கு. அந்த புள்ளைய பார்த்துட்டான் போலையே' என்றான். ‘ஓம் டா அவன் பொம்பளைப் புள்ளைகள கண்டாலே பேசுறதுக்கு பயப்படுவான் இப்போ என்ன ஆச்சு ம்ம்ம் நடக்கட்டும் நடக்கட்டும்' என்று பிரியன் கூறினான். கரன் மனதில் இனம்புரியாத எண்ணங்கள் அலை மோதின. அந்த யுவதி தனது குடும்பத்தினருடன் பூங்காவை பார்ப்பதற்கு வந்திருப்பாள் போலும். அவளும் இடையிடையே குடும்பத்தினருடன் பேசிக்கொண்டே கரனைப் பார்த்துக் கொண்டாள். அவளின் பேச்சு, அணிந்திருந்த உடை, என்பன அவள் சகோதர மொழியைப் பேசுகின்றவரகள் என புரிந்தது. இருந்தாலும், இங்கு காதல் என்று வரும்போது மொழி என்ன?... இனம் என்ன? எதுவுமே தடையாக வருவதில்லை. மனம் மட்டுமே இங்கே பிரதானம்.

பார்த்தவுடன் காதல் என்றெல்லாம் அடிக்கடி நாம் தமிழ் திரைப்படங்களில் பேசுவதை கேட்டிருக்கிறோம். அதுபோலதான், இந்த காதலுக்கும் காரணம் சொல்லலாம். இனி என்ன... தலைவன் தன் காதலை சொல்லிட தலைவி எவ்வாறு ஏற்பாள். என்றெல்லாம் நாம் சொல்லித்தான் தெரியவேண்டுமா! எது எப்படியோ இங்கு இரு மேகங்கள் காதல் மழையை பொழிய மனதால் சூழ்ந்து கொண்டன. யுவதியின் குடும்பத்தினர் மதிய நேரமாகும் போது தாம் கொண்டு வந்திருந்த உணவுப் பொதிகளை பிரித்து உண்ணும் வேளையில், கரனுக்கும் அவன் நண்பர்களுக்கும் பசி என்ற உணர்வே வந்தது.

அருகிலிருந்த சிற்றுண்டிச் சாலையில் மதிய உணவை முடித்துக் கொண்டனர். கரன், தான் என்ன சாப்பாடு சாப்பிட்டோம் என்பதைக்கூட அறியாதவனாய் சாப்பிட்டான். சாப்பிட்டவுடன் மீண்டும் நண்பர்களுடன் நேராக அந்த யுவதி இருந்த இடத்திற்கு அருகே வந்து நின்றான். நிமிடங்கள் நகர்கின்றதே தவிர அவர்களின் மனங்களோ நகரவே இல்லை. பார்வைகள் மட்டுமே இங்கு நிகழ்ந்தன.

பூங்காவிலே பலவித மரங்கள், விசேட மரங்கள், அழகான மரங்கள், மூலிகை மரங்கள் என பல்வேறு பகுதிகள் இருந்தன. அவற்றை பார்த்த வண்ணம் குறித்த யுவதியின் குடும்பத்தினர் ஒவ்வொன்றாக கடந்து சென்றனர். கரனின் பார்வையோ யுவதியில் மட்டுமே இருந்தது. அந்த யுவதியின் பார்வை கரனிலும் அதே சமயம் தன் பெற்றோர் மீதும் இருந்தது.

கரனின் நண்பர்களின் பார்வையோ யுவதியின் குடும்பத்தினர் மீதும் கரனின் மீதும், சில சமயம் பூங்காவின் அழகிலும் இருந்தது. இவ்வாறு பார்வைகளில் பல்வேறு கோணங்கள்.

கரனிடம் உள்ள அன்பை அந்த யுவதி புரிந்து கொண்டாளோ, என்னவோ இடையிடையே புன்னகையும் அவளிடமிருந்து பூவாக உதிர்ந்து கொண்டிருந்தது. அத்தருணங்களில் கரனின் உள்ளம் பூரித்தது. நண்பர்களின் நச்சரிப்பு கரனின் காதுகளில் அடிக்கடி விழுந்தது. ‘கொஞ்சம் பொறு மச்சான், எனக்கு எப்படி சொல்றது என்டு தெரியல, பயமா இருக்கு' என்றான் கரன். ஆனால், நண்பர்களோ விட்டபாடில்லை. எப்படியாவது யுவதியிடம் பேசி தொலைபேசி இலக்கத்தையாவது பெற்று விடுமாறு கூறினார்கள். இப்படியே நேரம் சென்று கொண்டிருந்தது.

இன்றைய சுற்றுலா பூங்காவிலே முடிந்து விட்டது என்று தான் சொல்லவேண்டும். மணி ஐந்தாகி விட்டது. எல்லோரும் பேருந்து நிறுத்தப்பட்டிருக்கும் இடத்திற்கு செல்வதற்காக கரனையும் அவரது நண்பர்களையும் அழைத்தார்கள். கரனுக்கு பயமும் பதற்றமும் அதிகரித்தது, இதயம் படபடத்தது, யுவதியை பின் தொடர்ந்து அன்றைய நாளும் கடந்து கொண்டிருந்தது. ஒருவாறாக நுழைவாயில் ஊடாக யுவதியின் குடும்பமும் வீட்டிற்கு செல்ல விரைந்தனர். அச்சமயம், தெருவோரம் இருந்த கடையில் பழங்களை வாங்குவதற்காக யுவதி தனியே சென்றாள். சந்தர்ப்பத்தை தவற விடாத கரனும் அவள் பின்னே சென்று தைரியத்தை மனதிலே வரவழைத்துக் கொண்டு சைகையில் தொலைபேசி எண்ணை கேட்டான். அதேநேரம் தனது பேருந்து சாரதி வாகனத்தின் ஒலி மூலம் அனைவரையும் அழைத்ததை உணர்ந்த கரன் ஏமாற்றத்துடன் நண்பர்களுடன் பேருந்தில் ஏறிக் கொண்டான்.

அவன் மனம் ஏமாற்றம் என்ற புயலால் தாக்கப்பட்டது போல, பேருந்து ஆசனத்தில் சரிந்து விழுந்தான். ஜன்னல் வழியே தலையை நீட்டிக் கொண்டு ஏதோ யோசனையில் ஆழ்ந்திருந்தான். அச்சமயம், ஒரு பேருந்து பின்நோக்கிய வண்ணம் கரனிருந்த பேருந்தின் அருகே நகர்ந்து வந்து தரித்து நின்றது. அந்த பேருந்தின் ஜன்னல் ஓரத்தில் கரனையே பார்த்த வண்ணம் ஒரு முகம் ஆம்! அந்த முகம் பூங்காவில் கண்ட முகம், அவள் கண்ணில் ஏதோ ஒரு ஏக்கம் யுவதியின் கையில் சிறிய கடதாசி துண்டு இருந்தது. அது என்னவென்று பார்ப்பதற்குள் அவள் இருந்த பேருந்து நகரத் தொடங்கியது. கரனின் நெஞ்சம் துடித்தது. தன் கையிலிருந்த கடதாசி துண்டை கசக்கி ஜன்னல் வழியே வெளியே தூக்கி எறிந்தாள். பின் சைகையால் அந்த துண்டினை அவனிடம் காட்டினாள். அடுத்த கணம் அவளின் பேருந்து விரைந்தது.

கரன் தன் இருக்கையிலிருந்து விரைந்து எழுந்து, பேருந்திலிருந்து இறங்கி ஓடினான். அந்த கடதாசி துண்டை எடுத்து விரித்துப் பார்த்தான் என்ன! ஆச்சரியம் அதிலே பெயரும், தொலைபேசி எண்ணும் இருந்தது. மீண்டும் பேருந்திலிருந்து ஒலியும், நண்பர்களின் உரத்த குரலினாலான அழைப்பினையும் காதில் வாங்கி கொண்டவனாய் பேருந்தில் வந்து மீண்டும் ஏறிக்கொண்டான்.

அவர்களின் பேருந்தும் பயணத்தை தொடர்ந்தது. கரனோ அந்த கடதாசியில் துண்டை பத்திரமாக எடுத்து தன் சட்டைப் பையில் போட்டுக் கொண்டு நிம்மதிப் பெருமூச்சுவிட்டான்.




# இந்தியாவின் 75ஆவது குடியரசு தினம் இன்றாகும்



இந்தியாவின் 75ஆவது குடியரசு தினம் இன்றாகும் (ஜனவரி 25), இதனை முன்னிட்டு, பல்வேறு நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. இதனோர் அங்கமாக பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இந்திய நடன வடிவங்கள், புதன்கிழமை (24) அரங்கேற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பில் கொழும்பில் உள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயம் அனுப்பிவைத்துள்ள செய்தி குறிப்பில்...

கலைகளினதும் அதனோடு இணைந்த பாரம்பரியத்தினதும் மெய்மயக்கும் கொண்டாட்டமான. ‘சிருங்காரம்: இந்திய சாஸ்திரீய நடனங்களின் சங்கமம்’ என்ற இந்த ஆற்றுகையானது, எட்டு இந்திய சாஸ்திரீய நடன வடிவங்களையும் அரங்கேற்றுகின்றது.

கலாசார உறவுகளுக்கான இந்தியப் பேரவையின் கலைஞர்கள். ஒடிசி (நம்ரதா மேஹ்தா தலைமையில் அவரது அணியினரான போராஹ) சித்தி வைகர், நமஹா மயூம்தர், அநுராதா சங்வி, த்ருவி ஜெய்ன்), ஆகிய வடிவங்களைக் கதகளி (ரெஞ்சிஸ் நாயர்), மணிப்புரி (பூர்பிதா முகெர்ஜி), சத்ரியா (சதாப்தி போராஹ்) ஆகிய வடிவங்களை அரங்கேற்றும் நிலையில், பிரசித்திபெற்ற இலங்கை கலைஞர்கள் பரதநாட்டியம் (தனுக தக்ஷித் சமரவீர), மோகினியாட்டம் (நிஷாலி சில்வா). கதக் (வெரோனிகா தசநாயக்கா) மற்றும் குச்சுப்புடி (தாக்ஷாயினி கமலநாதன்) ஆகிய நடன வடிவங்களை அரங்கேற்றினர்.

இந்திய சாஸ்திரீய நடனம் என்பது பல நூற்றாண்டுகளாக பரிணமித்து இன்றும் வாழும் ஒரு பாரம்ப ரியமாகும். அத்துடன், ஒவ்வொரு பாணியையும் தனித்துவமாக்கும் நுணுக்கங்கள் பாதுகாத்து மற்றும் நுட்பங்களைப் பாதுகாத்து குருவிலிருந்து சிஷ்யர்களுக்கு புகட்டப்பட்டு வரும் தொடர்ச்சியான பாரம்பரியமே இதுவாகும்.

இந்நடனக் கலைஞர்கள் கலாசார மரபுகளைப் பாதுகாப்ப வர்களாகவும் கொடுப்பவர்களாகவும் மாறுகின்றனர். இந்த பாரம்பரியத்தை உள்வாங்கும் பெருமுயற்சியில் ஆர்வத்துடன் ஈடுபட்டிருக்கும் சைவ மங்கையர் மாணவிகளும் இந்த தொடர்ச்சியினை குறித்த நிபுணர்களுடன் இணைந்திருந்தனர்.









# நெற்கதிர் காணிக்கை

பு.கஜிந்தன்

தைப்பூச தினமான வியாழக்கிழமை (25) பாரம்பரிய முறைப்படி வயலில் புதிர் எடுக்கும் சம்பிரதாய நிகழ்வுகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் சங்குவேலி வயலில் விளைந்திருந்த நெற்கதிர்களை அப்பிரதேச விவசாயிகள் பாரம்பரிய முறைப்படி மாட்டு வண்டியில் சென்று சூரியனுக்கு வணக்கம் தெரிவித்து நெல்லினை அறுவடை செய்தனர்.

அவற்றினை தலையில் சுமந்துசென்று மாட்டுவண்டியில் ஏற்றி பாரம்பரிய முறைப்படி உடுவில்,மருனார்மடம் ஊடாக இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கு காணிக்கையாக வழங்கினர்.







## புதிர் எடுத்தல்...

தமிழர்களின் பாரம்பரிய நடைமுறையாக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் புதிர் எடுத்தல் நிகழ்வு தைப்பூச நன்னாளான வியாழக்கிழமை (25) நடைபெற்றது. பிரசித்தி பெற்ற மட்டக்களப்பு தேத்தாதீவு கொம்புச் சந்தி ஆலயத்தில் புதிர் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் த.விமலானந்தராசாவின் தலைமையில் ஆலய பிரதம குரு சு.கு.விநாயகமூர்த்திக் குருக்கள் கிரியைகள், பூஜை வழிபாடுகளை முன்னெடுத்தார். இதேவேளை, ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம் இடம்பெற்றதோடு, சிறார்களின் நெல் அறுவடை, வசந்தன் கூத்தும் இடம்பெற்றது.

- வ.சக்தி





## வீடுகளிலும் புதிர் எடுத்தல்...

தைப்பூச நன்னாளில் புதிர் எடுக்கும் வழக்கத்தைத் தொன்று தொட்டு தமிழர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். வயலிலே நெற்கதிர்கள் எடுத்து வந்து தங்களது வீட்டு வாயிற் கதவுகளிலே வைத்து பின்னர் அதனை நிறைகுடம் வைத்து, மங்களகரமான பொருட்களோடு நெற்கதிரையும் வைத்து சுவாமி அறைக்குள் எடுத்துச் சென்று வழிபடுவார்கள்.

தைப்பூசத் தினமான வியாழக்கிழமை (25) மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்களின் வீடுகளிலும் இதுபோன்று இடம்பெற்றன.

- வ.சக்தி





## புதிர் எடுக்கும் பாரம்பரிய நிகழ்வு...

தைப்பூச நன்னாளில் பாரம்பரிய புதிர் எடுத்தல் நிகழ்வு, வீரமுனை ஸ்ரீ வழிபாட்டுப்பிள்ளையார் ஆலயத்தினால் வியாழக்கிழமை (25) சிறப்பாக நடைபெற்றது.

வீரமுனை கிராமத்தில் தமிழ் பாரம்பரிய நிகழ்வான வயல் வெளியில் நெற்கதிர் அறுத்தல், ஆலய பிரதம குரு சிவ ஸ்ரீ கிஷோவேந்தன் சர்மா மற்றும் சிவ ஸ்ரீ முரளிதரன் ஐயா தலைமையில் ஆலய பரிபாலன சபையினர் ஒத்துழைப்புடன் வீரச்சோலை வயல் வெளிக்குச் சென்று இனிதே நடைபெற்றது.

அங்கு காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறிலும் கலந்து கொண்டார்.

- வி.ரி. சகாதேவராஜா







## சங்காபிஷேகம்

காரைதீவு ஸ்ரீ பாலையடி வால விக்னேஸ்வர ஆலயத்தின் மகா சங்காபிஷேக தின நிகழ்வுகள், புதன்கிழமை (24) இடம்பெற்றன.

- வி.ரி. சகாதேவராஜா









திருப்பூர்

# கொசு வலை கவுன்சிலர்

திருமுருகன் பூண்டி நகராட்சி கூட்டம் புதன்கிழமை (25) நடந்தது. நகர்மன்றத் தலைவர் குமார் தலைமை வகித்தார். நகராட்சி ஆணையர் ஆண்டவன், துணைத் தலைவர் ராஜேஸ்வரி பொன்னுசாமி ஆகியோர் முன்னிலை வகித்துள்ளனர்.

கூட்டத்தில், 16ஆவது வார்டு அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) நகராட்சி கவுன்சிலர் தங்கவேல், தனது உடலில் கொசு வலை போர்த்தி நூதன போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

அப்போது, 16ஆவது வார்டில் கொசு உற்பத்தி அதிகமாகி நோய்த் தொற்று பரவி வருவதாக அவர் புகார் தெரிவித்துள்ளார். மேலும், ராக்கியாபாளையம் - உமைஞ்செட்டிபாளையம் வீதி, ஜெகநாதன் நகர் பகுதியில் உள்ள சாக்கடையை தூர்வார வேண்டும். கொசு மருந்து அடிக்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார்.

கோரிக்கைகள் தொடர்பாக உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என நகர்மன்றத் தலைவர் குமார் உறுதி அளித்ததால், தங்கவேல் போராட்டத்தை கைவிட்டுள்ளார்.



அயோத்தி

# கருவறைக்கு சென்ற அனுமன்

அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம் திங்கட்கிழமை (22) முடிந்த நிலையில், அதன் கருவறையில் நடந்த சுவாரசிய சம்பவம் தொடர்பிலான தகவல் ஒன்று தற்போது வெளியாகியுள்ளது.

500 ஆண்டுகால அயோத்தி ராமர் கோவில் பிரச்சினைக்கு 2019இல் முடிவுக்கு வந்தது. உச்சநீதிமன்றம் ராமர் கோவில் கட்டலாம் என தீர்ப்பு வழங்கிய நிலையில்,

இந்த நிலையில், அயோத்தி ராமர் கோவில் கும்பாபிஷேகம் கோலாகலமாக நிறைவு பெற்றுள்ளது. “ராமர் கோவிலில் சுவாரசியமான சம்பவம் ஒன்று நடந்துள்ளது.

இந்த நிலையில், புதன்கிழமை (24) மாலை 5.50 மணிக்கு கூடா மண்டபத்தின் தெற்கு வாசல் வழியாகக் குரங்கு ஒன்று நுழைந்து கருவறையில் உற்சவ மூர்த்தி அருகே சென்றுள்ளது.

இதை அவதானித்த பாதுகாப்பு காவலர், சிலையைக் கீழே தள்ளிவிடும் என நினைத்து வேகமாகச் சென்றார். இதைக் கவனித்த குரங்கு மெதுவாக வடக்கு கதவை நோக்கி ஓடியுள்ளது. கதவு மூடப்பட்டவுடன், கிழக்கு நோக்கிச் சென்று பக்தர்களுக்கு இடையூறு இன்றி அமைதியாகச் சென்றுள்ளது.

இதுபற்றி காவலர் கூறுகையில், “பால ராமரைக் காண அனுமனே வந்திருக்கிறார்” என்றார்.

சென்னை

மாவட்ட தலைவர்களுடன்

# நடிகர் விஜய் ஆலோசனை

நடிகர் விஜய்யின் மக்கள் இயக்கம் அரசியல் இயக்கமாக மாறி வருகிறது. அரசியலுக்கு வருவதாக அவர் வெளிப்படையாக அறிவிக்காவிட்டாலும், அவரது இயக்கம் மற்றும் அவரது செயல்பாடுகளால் விரைவில் விஜய் அரசியலுக்கு வருவார் என்ற எதிர்பார்ப்பு ரசிகர்கள், பொதுமக்கள் இடையே அதிகரித்துள்ளது.

இந்நிலையில், சென்னையை அடுத்த பனையூரில் விஜய் மக்கள் இயக்க மாவட்ட தலைவர்களுடன் நடிகர் விஜய் ஆலோசனை நடத்தி வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

பாராளுமன்றத் தேர்தல் நெருங்கி வரும் நிலையில், சென்னை, கோவை, திருச்சி, மதுரை, நெல்லை உள்ளிட்ட மாவட்டங்களை சேர்ந்த 150க்கும் மேற்பட்ட நிர்வாகிகளுடன் நடிகர் விஜய் ஆலோசனை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விஜய் மக்கள் இயக்க பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் தலைமையில் தொடங்கிய இந்த கூட்டத்தில், நேரடியாக தேர்தலில் போட்டியிடுவது குறித்தும், வேறு கட்சிகளுக்கு ஆதரவு அளிப்பது குறித்தும் ஆலோசிக்கப்படுவதாக கூறப்படுகின்றது.



# உணவுக்காக அதிகம் கொல்லப்படும் உயிரினம் எது தெரியுமா?

உலகில் ஆண்டொன்றுக்கு உணவுக்காக மட்டும் 10,000 கோடி விலங்குகள் கொல்லப்படுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

“தி எகனாமிஸ்ட்” என்ற முன்னணி செய்தி நிறுவனம் இது குறித்த ஆய்வு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஆண்டு ஒன்றுக்கு 1,900 கோடி கோழிகளும், 150 கோடி மாடுகளும், 100 கோடி ஆடுகளும், நூறுகோடி பன்றிகளும் உணவுக்காக கொல்லப்படுகின்றன.

இவை தவிர்த்து, ஏனைய பல விலங்குகளும் உணவுக்காக மனிதர்களால் பலியாக்கப்படுகிறது.

ஒட்டு மொத்த உயிரினங்களில் அதிகம் உணவுக்காக உபயோகிக்கப்படும் உயிரினமாக கோழி உள்ளது. நாளொன்றுக்கு 20 கோடிக்கும் அதிகமான கோழிகள் உணவுக்காக கொல்லப்படுகின்றன.

அதன்படி, ஒரு நிமிடத்தில் ஒரு இலட்சத்து 40 ஆயிரம் கோழிகள் உயிரை விடுகின்றன. இதேபோன்று, ஆண்டொன்றுக்கு 50 ஆயிரம் ஆமைகளும், 83 ஆயிரம் முதலைகளும், ஒரு இலட்சம் எருமை மாடுகளும் கொல்லப்படுவதாக தகவல்கள் கூறுகின்றன.

ஆண்டு ஒன்றுக்கு 8 இலட்சம் ஒட்டகங்கள் உணவுக்காக பலியாக்கப்படுகின்றன.

மேலும், ஆண்டொன்றுக்கு 50 இலட்சம் குதிரைகள் உணவுக்காக அறுக்கப் படுவதாக தகவல்கள் கூறுகின்றன.

இதேபோன்று, நாய்கள், புறாக்கள், சுறா உள்ளிட்டவையும் அதிக எண்ணிக்கையில் உணவுக்காக மனிதர்களால் வேட்டையாடப்படுகிறது.

உலகிலேயே மிகவும் அதிக அளவு அசைவ உணவை எடுத்துக் கொள்ளும் நாடாக சீனா இருந்து வருகிறது. உலகின் ஒட்டுமொத்த அசைவு உணவு நுகர்வில் சீனாவின் பங்கு 25 சதவீதத்திற்கும் அதிகமாக இருப்பதாக தகவல்கள் கூறுகின்றனர்.

இருபதுக்கு–20 சர்வதேசப் போட்டிகளில்

# ஆண்டின் சிறந்த வீரராக சூரியகுமார் யாதவ்

இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டிகளில், ஆண்டின் சிறந்த வீரராக இந்தியாவின் சூரியகுமார் யாதவ் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகத் தெரிவாகியுள்ளார்.

சிம்பாப்வேயின் சிகண்டர் ராசா, நியூசிலாந்தின் மார்க் சப்மன் ஆகியோரைத் தாண்டியே இவ்விருதை சூரியகுமார் யாதவ் வென்றுள்ளார்.

17 போட்டிகளில் கடந்தாண்டு 48.86 என்ற சராசரியில் 100 பந்துகளுக்கு 155.95 ஓட்டங்கள் என்ற வேகத்தில் 733 ஓட்டங்களை சூரியகுமார் யாதவ் பெற்றுள்ளார்.

ஆண்டின் சிறந்த வளர்ந்து வரும் வீரராக நியூசிலாந்தின் றஷின் றவீந்திர தெரிவாகியுள்ளார். தென்னாபிரிக்காவின் ஜெரால்ட் கொயட்ஸி, இலங்கையின் டில்ஷான் மதுஷங்க, இந்தியாவின் யஷஸ்வி ஜைஸ்வாலைத் தாண்டியே இவ்விருதை றவீந்திர வென்றுள்ளார்.

கடந்தாண்டு 25 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 41 என்ற சராசரியில் 820 ஓட்டங்களைப் பெற்ற றவீந்திர, 18 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

ஆண்டின் டெஸ்ட் அணி: உஸ்மான் கவாஜா, திமுத் கருணாரத்ன, கேன் வில்லியம்சன், ஜோ றூட், ட்ரெவிஸ் ஹெட், இரவீந்திர ஜடேஜா, அலெக்ஸ் காரி, பற் கமின்ஸ் (அணித்தலைவர்), இரவிச்சந்திரன் அஷ்வின், மிற்செல் ஸ்டார்க், ஸ்டுவேர்ட் ப்ரோட்.

ஆண்டின் ஒருநாள் சர்வதேசப் போட்டி அணி: றோஹித் ஷர்மா (அணித்தலைவர்), ஷுப்மன் கில், ட்ரெவிஸ் ஹெட், விராட் கோலி, டரைல் மிற்செல், ஹென்றிச் கிளாசென் (விக்கெட் காப்பாளர்), மார்கோ ஜன்சன், அடம் ஸாம்பா, மொஹமட் சிராஜ், குல்தீப் யாதவ், மொஹமட் ஷமி.

ஆண்டின் இருபதுக்கு -20 சர்வதேசப் போட்டி அணி: யஷஸ்வி ஜைஸ்வால், பில் ஸோல்ட், நிக்கலஸ் பூரான் (விக்கெட் காப்பாளர்), சூரியகுமார் யாதவ் (அணித்தலைவர்), மார்க் சப்மன், சிகண்டர் ராசா, அல்பேஷ் ரம்ஜனி, மார்க் அடைர், ரவி பிஷ்னோய், றிச்சர்ட் நகரவா, அர்ஷ்டீப் சிங்.







# றியல் மட்றிட்டிலிருந்து விலகும் வின்ஷியஸ்?

பிரெஞ்சு லீக் 1 கால்பந்தாட்டக் கழகமான பரிஸ் ஸா ஜெர்மைனின் முன்களவீரர் கிலியான் மப்பேயைக் கைச்சாத்திட்டால், தமது முன்களவீரர் வின்ஷியஸ் ஜூனியருடமிருந்து ஸ்பானிய லா லிகா கழகமான றியல் மட்றிட் நகரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நடப்பு லா லிகா பருவகாலத்தில் 12 போட்டிகளில் ஐந்து கோல்களையே 23 வயதான வின்ஷியஸ் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# “ஓய்வு பெறுவதாக தான் அறிவிக்கவில்லை”

குத்துச்சண்டை விளையாட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக தான் அறிவிக்கவில்லை என்று இந்தியாவின் பிரபலமான குத்துச்சண்டை வீராங்கனை மேரி கோம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் “குத்துச்சண்டை போட்டியில் இருந்து நான் ஓய்வு பெற உள்ளதாக செய்திகள் வெளியாகி இருப்பதைப் பார்த்தேன். அது உண்மையல்ல. விளையாட்டில் சாதிக்க வேண்டும் என்ற தாகத்துடன் இன்னமும் நான் இருக்கிறேன். ஆனால், வயது வரம்பு காரணமாக ஒலிம்பிக் போட்டியில் என்னால் பங்கேற்க இயலாத நிலை உள்ளது. இருந்தபோதும், நான் எனது விளையாட்டைத் தொடர்கிறேன். நான் ஓய்வு பெறுவதாக இருந்தால் முறைப்படி ஊடகங்களைச் சந்தித்து அதனை தெரிவிப்பேன்” என தெரிவித்துள்ளார்.

கோப்பா டெல் ரே தொடர்:

# பார்சிலோனா அவுட்

ஸ்பானிய கோப்பா டெல் ரே தொடரிலிருந்து பார்சிலோனா வெளியேற்றப்பட்டுள்ளது.

அத்லெட்டிக் பில்பாவோவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான காலிறுதிப் போட்டியில் 2-4 என்ற கோல் கணக்கில் தோல்வியடைந்தே விலகல் முறையிலான இத்தொடரிலிருந்து பார்சிலோனா வெளியேறியுள்ளது.

பார்சிலோனா சார்பாக, றொபேர்ட் லெவன்டோஸ்கி, லமினே யமாஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். பில்பாவோ சார்பாக, கொர்கா குருஸெட்டா, ஒய்ஹான் சஞ்செல், இனாகி வில்லியம்ஸ், நிக்கோ வில்லியம்ஸ் ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை 26, ஜனவரி 2024, இல. 08, ஹுனுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.